Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, JUNE 24, 2024

திங்கட்கிழமை ஜூன் 24, 2024 | ஒளி: 09 கதிர்: 279 | பக்கம்:06 | நகரப்பதிப்பு ★ | FREE

புதிய சுற்றறிக்கை இன்று வருகிறது

அரச பாடசாலைகளில் தரம் ஒன்றிற்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான சுற்றறிக்கையின் குறைபாடுகளை நிவர்த்தி செய்து, திங்கட்கிழமை (24) வெளியிட உள்ளதாகக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

பொன்சேகாவுக்கு உலகின் உயர்ந்த பதவி

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு உலகின் பாதுகாப்புத் துறையில் மிக உயர்ந்த மார்ஷல் பதவி விரைவில் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கத்திடம் பொன்சேகா விடுத்த கோரிக்கைக்கு அமைய ஆறு நட்சத்திர ஜெனரலாக கருதப்படும் 'மார்ஷல்' பதவி அவருக்கு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தொடர்ச்சி P2

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கக் கோரிக்கை நிராகரிப்பு

இங்கிலாந்தில் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கக் கோரி நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் (TGTE) சமர்ப்பித்த விண்ணப்பத்தை அந்த நாட்டின் தடைசெய்யப்பட்ட அமைப்புகளின் மேன்முறையீட்டு ஆணையம் வெள்ளிக்கிழமை (21) நிராகரித்துள்ளது.

இந்த முடிவு விடுதலைப் புலிகள் இங்கிலாந்தில் தடை செய்யப்பட்ட அமைப்பாக இருப்பதை உறுதி செய்கிறது.

அகிம்சை வழிகளில் அதன் அரசியல் மற்றும் கருத்தியல் நோக்கங்களைத் தொடர விரும்புவதால், ஐக்கிய இராச்சியத்தில், தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு தடைசெய்யப்படக்கூடாது என்று நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் வாதத்தை முன்வைத்திருந்தது.

எனினும் இலங்கையின் சுதந்திர தமிழ் அரசை நிறுவுவதற்கு நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் ஆதரவளிக்கிறது என்ற நிலைப்பாட்டை இலங்கை அரசாங்கம் கொண்டிருக்கிறது என்பதை ஆணையகம் கவனத்தில் கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய இராச்சியத்தின் இராஜாங்க செயலர், தமிழீழ விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதப் பட்டியலில் 2001ஆம் ஆண்டு மார்ச் 29ஆம் திகதியன்று சேர்த்தார்.

இந்தநிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மீதான தடையை நீக்குவதற்கு முன்னரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

தொடர்ச்சி P2

"மண்ணை நம்பி வாழ்வோர் சொந்தக் காலில் நிற்கலாம்"

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு தமது கட்சி ஆதரவளிக்கவுள்ளதாக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும், இராஜாங்க அமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன் உள்ளிட்ட கட்சி உறுப்பினர்களுக்கு இடையிலான சந்திப்பொன்று மட்டக்களப்பில் உள்ள கட்சித் தலைமையகத்தில் சனிக்கிழமை (22) இடம்பெற்றது.

தொடர்ச்சி P2

"சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்"

நிதர்ஷன் வினோத்

ஊடகவியலாளரின் வீட்டைத் தாக்கியவர்களும் அதனைச் செய்வித்தவர்களும் உடனடியாக கைது செய்யப்பட்டு, சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அச்சுவேலியைச் சேர்ந்த ஊடகவியலாளர் தம்பித்துரை பிரதீபனின் வீடு கடந்த 13ஆம் திகதி தாக்கப்பட்டு வாகனங்களுக்கும் எரியூட்டப்பட்டமை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன், ஞாயிற்றுக்கிழமை (23) நேரில் சென்று பார்வையிட்டார்.

தொடர்ச்சி P2

"மேன்முறையீடு செய்ய முடியும்"

எம்.எஸ்.எம்.ஹனீபா

கிழக்கு மாகாணத்திலுள்ள மாகாணப் பாடசாலைகளில் நிலவுகின்ற சிங்கள மற்றும் தமிழ் மொழி மூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவை 3(அ) தரத்துக்குப் பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்காக வெளியிடப்பட்டுள்ளன.

அதில், பட்டதாரி நியமனப் பட்டியலில் பெயர் குறிப்பிடப்படாத பரீட்சாத்திகள் மேன்முறையீடு செய்ய முடியும் என கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஏ.மன்சூர், ஞாயிற்றுக்கிழமை (23) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

கோட்டாவின் ஜீப்பை பியூமி பெற்றது எப்படி?

நடிகையும் மொடலுமான பியூமி ஹன்சமாலி, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பயன்படுத்திய CB M 1949 எனும் இலக்கத்தைக்கொண்ட ரேஞ்ச் ரோவர் ஜீப்பை 2021 ஆம் ஆண்டு கொள்வனவு செய்துள்ளார்.

780 இலட்சம் ரூபாய் பெறுமதியான அந்த வாகனத்தை வாகன குத்தகை நிதி நிறுவனத்திடம் 400 இலட்சம் ரூபாய் செலுத்தி கொடுக்கல் வாங்கல் ஊடாக கொள்வனவு செய்துள்ளார்.

தொடர்ச்சி P2

புதிய காத்தான்குடி பெரிய ஜும்மா பள்ளிவாசலுக்கு ஜனாதிபதி விஜயம்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரையின் பேரில் ஸ்தாபிக்கப்பட்ட காஸா சிறுவர் நிதியத்திற்கு புதிய காத்தான்குடி பெரிய ஜும்மா பள்ளிவாசல், ஒரு கோடியே எழு இலட்சத்து அறுபத்து ஒன்பதாயிரத்து நானூற்று பதினேழு ரூபாவை (10,769,417) நன்கொடையாக வழங்கியுள்ளது. குறித்த பள்ளிவாசலில் ஞாயிற்றுக்கிழமை (23) இடம்பெற்ற விசேட பிரார்த்தனையின் பின்னர், காஸா நிதியத்திற்கான காசோலை பள்ளிவாசல் நிர்வாகத்தினரால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

மலையக சேவையை 9 மணிநேரம் தடுத்து மரம்

ரஞ்சித் ராஜபக்ஷ

பாரிய மரமொன்று முறிந்து புகையிரத தண்டவாளத்தில் வீழ்ந்ததன் காரணமாக இடைநிறுத்தப்பட்ட மலையகத்துக்கான புகையிரத போக்குவரத்து ஒன்பது மணித்தியாலங்களின் பின்னர் வழமைக்கு கொண்டுவரப்பட்டது.

தொடர்ச்சி P2

உளட்சத்து குறைபாட்டால் குழந்தை பாதிப்பு

அன்றாடம் சத்தான உணவு வகைகள் கிடைக்காத குழந்தைகளின் நிலையை 'குழந்தை உணவு வறுமை' என்று யுனிசெப் மற்றும் உலக சுகாதார அமைப்பு இணைந்து வரையறுத்துள்ளன. இந்நிலையில், குழந்தை உணவு வறுமையால் தெற்காசிய நாடுகள் மற்றும் துணை சஹாரா ஆப்பிரிக்க பிராந்தியங்கள் அதிகம் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

"ராஜபக்ஷ அணி வந்தால் நாங்கள் வெளியேறுவோம்"

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் வழிநடத்தல் குழுவில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ராஜபக்ஷ அணி தொடர்ந்தும் பங்குபற்றினால், அதில் இருந்து விலகி தமது கட்சி தனித்து நிற்கும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு அறிவிக்க பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா உள்ளிட்ட குழுவினர் தீர்மானித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

"வயிற்று பிழைப்புக்கு சென்றோரை விடுவிடு"

உறவினர்கள் கண்ணீர் மல்க பேட்டி

எஸ்.ஆர்.லெம்பேட்

ராமேஸ்வரம் மீன் பிடித்து துறைமுகத்தில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற மூன்று படகையும் அதிலிருந்து 22 மீனவர்களையும் எல்லை தாண்டி மீன்பிடித்தனர் என்றக் குற்றச்சாட்டின் கீழ், இலங்கை கடற்படை கைது செய்தது.

தொடர்ச்சி P2

மு.கா. தலைவராக ஹக்கீம் மீண்டும் தெரிவு

எம்.எஸ்.எம்.நூர்தீன்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய தலைவராக மீண்டும். பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி ரவூப் ஹக்கீம் ஏக மனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 31ஆவது பேராளர் மாநாடு காத்தான்குடி ஹிஸ்புல்லா மண்டபத்தில் சனிக்கிழமை(22) நடைபெற்றது. இதன் போது முஸ்லிம் காங்கிரஸின் தேசிய தலைவராக ரவூப் ஹக்கீம் ஏகமானதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 31ஆவது பேராளர் மாநாடு ஆரம்பமான போது காரி அஷ்ஷெய்க் அப்துல் ஜப்பார்

அவர்களினால் கிறாஅத் ஓதப்பட்டது. இதையடுத்து கட்சியின் கீதம் பாடப்பட்டது

இதன் பின்னர் கட்சியின் தேசிய தலைவராக மீண்டும். பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி ரவூப் ஹக்கீம் ஏகமனதாகத் தெரிவு செய்யப்படுவதாகக் கட்சியின் தவிசாளர் முழக்கம் மஜீத் அறிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

தடை நீக்கக் கோரிக்கை நிராகரிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளின் தடை அகற்றப்பட வேண்டும் என்று நாடு கடந்த தமிழீழ அரசாங்கம், பிரித்தானிய உள்துறை அமைச்சகத்திற்கு 2018ஆம் ஆண்டு டிசம்பர் 7ஆம் திகதியன்றும் விண்ணப்பித்திருந்தது.

எனினும் கூட்டுப் பயங்கரவாத பகுப்பாய்வு மையம், உள்நாட்டு மற்றும் சர்வதேச பயங்கரவாத அச்சுறுத்தல்களின் பகுப்பாய்வு மற்றும் மதிப்பீட்டிற்கான பிரித்தானிய மையம் ஆகியவற்றின் மதிப்பாய்வு செயல்முறையைத் தொடர்ந்து, இராஜாங்க செயலர் 2019 மார்ச் 8ஆம் திகதியன்று விண்ணப்பத்தை நிராகரித்து விட்டார்.

இருந்தபோதும் 2020 ஒக்டோபர் 21ஆம் திகதியன்று மேன்முறையீட்டு ஆணையம் மேன்முறையீட்டாளர்களின் மேன்முறையீட்டை அனுமதித்தது.

இது தொடர்பான தீர்ப்பு 2021 மே 13ஆம் திகதி வழங்கப்பட்டது. அதில், 2012 ஜூன் 3ஆம் திகதிக்குள் தடை நீக்கம் செய்வதற்கான விண்ணப்பத்தில் கூடுதல் பிரதிநிதித்துவங்களை வழங்க வேண்டும், மேலும் அரச செயலர் தனது விண்ணப்பத்தின் மீதான தடையை நீக்குவதற்கான முடிவை எடுக்க வேண்டும் என்று

ஆணையகம் குறிப்பிட்டிருந்தது.

எனினும், தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையைத் தொடர்வதற்கு இராஜாங்க செயலர் புதிய முடிவை எடுத்து, அது 2021 ஓகஸ்ட் 31ஆம் திகதி அறிவிக்கப்பட்டது.

இந்தநிலையில், 2021 ஒக்டோபர் 12ஆம் திகதியன்று நாடு கடந்த தமிழீழ அரசாங்கம், அந்த முடிவை எதிர்த்து மேன்முறையீடு செய்தது. அத்துடன், மற்றொரு குழுவும் தடை நீக்கம் செய்வதற்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தது.

எனினும், அந்த விண்ணப்பங்களும் இராஜாங்க செயலாளரால் நிராகரிக்கப்பட்டன.

இந்தநிலையிலேயே தற்போது மேன்முறையீட்டு ஆணைக்குழு மேன்முறையீட்டை நிராகரித்ததுடன், இங்கிலாந்தில் விடுதலைப் புலிகள் மீதான தடையைத் தொடர உத்தரவிட்டுள்ளது.

மேன்முறையீடு செய்தவர்கள் சார்பில் பீட்டர் ஹெய்ன்ஸ் மற்றும் பொது சட்ட நலன் மையத்தால் அறிவுறுத்தல் அமைப்பின் சாந்தி சிவகுமாரன் ஆகியோர் ஆணையகத்தில் முன்னிலையாகினர். இராஜாங்க செயலர் சார்பில் பென் வட்சன் கே.சி., அண்ட்ரூ டீக்கின் மற்றும் வில் ஹேஸ் ஆகியோர் முன்னிலையாகினர்.

பொன்சேகாவுக்கு உலகின் உயர்ந்த பதவி

வடக்கின் யுத்த வெற்றிக்காக பொன்சேகா ஆற்றிய தியாகத்தைக் கருத்தில் கொண்டு இதற்கு முன்னர் பீல்ட் மார்ஷல் பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

அவருக்கு இம்முறை வழங்கப்பட உத்தேசிக்கப்பட்ட மார்ஷல் பதவி இதற்கு முன்னர் உலகின் பிரபல அரசியல் தலைவர்கள் மற்றும் இராணுவத் தலைவர்கள் பலருக்கு வழங்கப்பட்டிருந்தது.

யூகோஸ்லாவியாவின் முன்னாள் ஜனாதிபதி மார்ஷல் டிட்டோ, அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் வொஷிங்டன், ரஷ்யாவின் முன்னாள் ஜனாதிபதி ஜோசப் ஸ்டாலின், சீனாவின் முன்னாள் ஜனாதிபதி மாவோ சேதுங், வடகொரியாவின் முன்னாள் ஜனாதிபதி கிம் இல் சுங், ஜெர்மனியின் முன்னாள் போர்த் தலைவர் ஹெர்மன் கோரிங் மற்றும் பிற உயர்மட்ட ரஷ்யாவின் தலைவர்கள் இதற்கு முன் மார்ஷல் பட்டத்துடன் கௌரவிக்கப்பட்டனர்.

"சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்"

இதன்போது கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், ஊடகவியலாளர் ஒருவரின் வீட்டுக்குத் தாக்குதலை மேற்கொண்டமை மிலேச்சத்தனமானதும் கண்டிக்கத்தக்கதான விடயமாகும். எனவே, இதற்குப் பொறுப்பானவர்களும் இதனை செய்வித்தவர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை குறித்த விடயத்தினை செய்தவர்களும் செய்வித்தவர்களும் உடனடியாக கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்றார்.

"மேன்முறையீடு செய்ய முடியும்"

கிழக்கு மாகாணத்திலுள்ள மாகாணப் பாடசாலைகளில் நிலவுகின்ற சிங்கள மற்றும் தமிழ் மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவை 3(அ) தரத்துக்குப் பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரப்பட்டு, போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களின் நியமனப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

விண்ணப்பதாரி கிழக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட பட்டதாரியாகவும் அல்லது விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் மூன்று வருடங்களோ அல்லது அதற்கு அதிக காலமோ தொடர்ச்சியாகக் கிழக்கு மாகாணத்தில் வசித்திருத்தல் அத்துடன் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

பட்டம் சார்ந்த பாடங்கள் மற்றும் விண்ணப்பிக்கும் பாடம் தொடர்பிலான பிரச்சினைகள் சம்பந்தமான இறுதி முடிவு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

பட்டதாரி ஆசிரியர் நியமனப் பட்டியலில் பெயர் வெளியிடப்படாத பரீட்சாத்திகள் தங்களது மேன்முறையீடுகளை இம் மாதம் 28ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம், 198- உட்துறைமுக வீதி, திருகோணமலை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் அறிவித்துள்ளார்.

"ராஜபக்ஷ அணி வந்தால் நாங்கள் வெளியேறுவோம்"

இதன்படி ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் ராஜபக்ஷ முகாமின் ஆதரவு தேவையா அல்லது தனது சொந்த அணியினரின் ஆதரவு தேவையா என்பதை ஜனாதிபதியே தெரிவு செய்ய வேண்டும் என்றும் அக்குழுவினர் தெரிவித்ததுள்ளனர்.

ஜனாதிபதியின் தேர்தல் வழிநடத்தல் குழுவிற்குத் பசில் ராஜபக்ஷவை அழைத்தமைக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ள குழுவினர், அதனையும் மீறி அவர் தொடர்ந்தும் பங்குபற்றுவதாக அக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிமல் சிறிபால டி சில்வா தரப்பினரும் நிமல் லான்சா மற்றும் குழுவினருடன் இணைந்து செயற்படுவதால், இந்தக் கருத்தை எதிர்காலத்தில் ஜனாதிபதிக்கு அறிவிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அறியமுடிகின்றது.

"வயிற்று பிழைப்புக்கு சென்றோரை விட்டுவிடு"

அவர்களை, காங்கேசன்துறை கடற்படை முகாமிற்கு அழைத்துச் சென்று விசாரணைக்குப் பின்னர் யாழ்ப்பாணம் மீன்வளத்துறை அதிகாரிகளிடம் மீனவர்கள், படகுடன் ஒப்படைக்கப்பட்டனர்.

ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் மீன் பிடித்து துறைமுகத்திலிருந்து 507 விசைப்படகுகளில் 5 ஆயிரத்திற்கும் அதிகமான மீனவர்கள் மீன்பிடி அனுமதிச் சீட்டு பெற்று மீன் பிடிக்கக் கடலுக்குச் சனிக்கிழமை (22) சென்றனர்.

மீனவர்கள், ஞாயிற்றுக்கிழமை (23) அதிகாலை சுமார் 2 மணியளவில் நெடுந்தீவு கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது, அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக ஜஸ்டின், ரெயிமென்ட் மற்றும் கெரின் ஆகியோருக்கு சொந்தமான 3 மீன்பிடி விசைப் படகுகளையும் அதிலிருந்த சுரேஷ் பாபு, காளிதாஸ், ரூபின், கண்ணன், நாகராஜன் உள்ளிட்ட 22 மீனவர்களைக் கைது செய்தனர்.

அவர்களை, காங்கேசன்துறை கடற்படை முகாமிற்கு அழைத்துச் சென்று அவர்களிடம் முதல் கட்ட விசாரணை செய்து பின்னர் மயிலிட்டி மீன்பிடி துறைமுகத்தில் வைத்து மீனவர்கள் யாழ்ப்பாணம் மீன்வளத்துறை அதிகாரிகள் ஒப்படைக்கப்பட்டனர்.

ஒப்படைக்கப்பட்ட மீனவர்களுக்கு மலேரியா மற்றும் கொரோனா பரிசோதனை செய்த பின்னர் மீனவர்கள் அனைவரும் தற்போது யாழ்ப்பாணம் மீன்வளத்துறை அலுவலகத்துக்கு அழைத்துச் சென்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றனர். மீன்வளத்துறை அதிகாரிகள் விசாரணைக்குப் பின் மீனவர்கள் அனைவரும் யாழ்ப்பாணம் ஊர்காவல்துறை நீதிமன்றத்தில் முன்னிறுத்தப்பட்டு யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப்படுவார்கள் என மீன்வளத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.60 நாள் மீன்பிடி தடைக்காலம் முடிந்து ஒரு வாரம் காலம் மட்டும் முடிவடைந்த நிலையில் இலங்கை கடற்படையினர் ராமேஸ்வரம் மீனவர்கள் 22 பேரைச் சிறை பிடித்துச் சென்றது ராமநாதபுரம் மாவட்ட கடற்கரை கிராமங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. வயிற்றுப் பிழைப்பிற்காக மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களை இலங்கை கடற்படை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களின் உறவினர்கள் கண்ணீர் மல்க கோரிக்கை விடுத்துள்ளனர்.

உளடசசதது குறைபாட்டால்...

சர்வதேச அளவில் 18 கோடியே 10 இலட்சம் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து போதாமையால் அவர்களது உயரம், உடல் உள்ளிட்ட ஒட்டுமொத்த வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த 18. 1 கோடி பாதிக்கப்பட்ட குழந்தைகளில் 65 சதவீதத்தினர் இந்தியா, கின்யா, ஆப்கானிஸ்தான், புர்க்கினா பாசோ, எத்தியோப்பியா உள்ளிட்ட 20 நாடுகளைச் சேர்ந்தவர்கள்.

தெற்காசிய நாடுகளில் மட்டும் 6கோடியே 40 இலட்சம் குழந்தைகள் ஊட்டச்சத்து மிக்க உணவு இன்றி வாடிக் கொண்டிருக்கின்றனர். அந்த பட்டியலில் சோமாலியா நாடு முதலிடத்தில் உள்ளது. கொரோனா பெருந்தொற்றுக்கு பிந்தைய காலத்தில் பொருளாதார சிக்கல்களில் இருந்து ஓரளவு மீண்டாலும் உணவு பண்டங்கள் உட்பட அனைத்து விதமான பொருட்களின் விலைவாசியும் அதிகரித்திருப்பதே அவலநிலைக்கான காரணம் என்று இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முகா. தலைவராக ஹக்கீம் மீண்டும் தெரிவு

இதையடுத்து, தக்பீர் முழக்கம், கரகோஷங்களுக்கு மத்தியில் தலைவர் ரவூப் ஹக்கீம் மாநாட்டுக்கு தலைமை வகித்து கட்சியின் 33 பேர் கொண்ட உயர் பீடத்தை அறிவித்தார். பிரதி தலைவர்களாகப் பாராளுமன்ற உறுப்பினர்களான

எச்.எம்.எம். ஹரீஸ்.
பைஸால் காசீம்.
அலி ஸாஹிர் மௌலானா.
முன்னாள் ஆளுநர்
எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மன்சூர் எஸ்.எம்.ஏ.கபூர் மற்றும் அன்வர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன்,

தவிசாளராக முழக்கம் மஜீத் செயலாளராக நிஸாம் காரியப்பர் பிரதி செயலாளராக மன்சூர் ஏ காதர் தேசிய அமைப்பாளராகப் பாராளுமன்ற உறுப்பினர் எம். எஸ்.தௌபீக் பொருளாளராக றஹ்மத் மன்சூர் பிரதி அமைப்பாளராக முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை, தேசிய கொள்கை பரப்புச் செயலாளராக முபீன் சர்வதேச நாடுகளுக்கான இணைப்பாளராக சிறாஜ் மீராசாகிப் பிரதி பொருளாளராக யஹியாகான் உட்பட 33 பேரையும் தலைவர் ரவூப் ஹக்கீம் அறிவித்தார்.

இதையடுத்து தக்பீர் கூறி தெரிவை அங்கீகரித்தனர்.

இந்த பேராளர் மாநாடு கட்சியின் பிரதி தலைவரும் முன்னாள் ஆளுநருமான ஹிஸ்புல்லாஹ் அவர்களின் ஏற்பாட்டில் காத்தான்குடியில் மிகவும் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதில் பேராளர்களின் கருத்துக்களும் இடம் பெற்றதுடன் நாடு முழுவதுமிருந்து அழைக்கப்பட்டிருந்த 1,500 பேராளர்கள் கலந்து கொண்டனர்.

புதிய சுற்றறிக்கை இன்று வருகிறது

மாணவர்களுக்கான கல்வியில் சம வாய்ப்புகளை உறுதிப்படுத்தும் வகையில் புதிய சுற்றறிக்கை வெளியிடப்படவுள்ளது.

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவினால் முன்வைக்கப்பட்ட சுற்றறிக்கைக்கு கடந்த ஜூன் 20ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது.

குறித்த சுற்றறிக்கையில், பிறப்புச் சான்றிதழ் இல்லாவிட்டாலும், ஏற்றுக்கொள்ளக்கூடிய வயதை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் இருந்தால், அந்தக் குழந்தைக்கு எந்தவித அநீதியும் ஏற்படாத வகையில் பாடசாலைக்கு சேர்க்கப்பட வேண்டும் என்று புதிய சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பிறப்புச் சான்றிதழ் இல்லாத மற்றும் ஐந்து வயதுக்குக் குறைவான மற்றும் வயதுச் சான்றிதழை வழங்கும் குழந்தைகளுக்கு நியாயமற்ற அல்லது பாரபட்சமாக நடத்தப்படக்கூடாது என்று கூறப்பட்டுள்ளது.

அத்துடன், "ஒருவரின் சொந்தக் குழந்தை அல்லது பேரக்குழந்தை, பேத்திகள் அல்லது ஒருவரின், மனைவியின் சகோதரர்கள் மற்றும் சகோதரிகளின் குழந்தைகள்", "ஒருவரின், மனைவியின் சகோதரர்கள் மற்றும் சகோதரிகளின் குழந்தைகள்" என்று திருத்தம் செய்யப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது.

பல்வேறு யோசனைகள் மற்றும் ஆலோசனைகளைக் கருத்திற்கொண்டு முன்னைய சுற்றறிக்கைகளின் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் மேலும் பல திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

"மண்ணை நம்பி வாழ்வோர் சொந்தக் காலில் நிற்கலாம்"

கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்யும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் திட்டத்திற்கு ஆதரவு வழங்கினால் மண்ணை நம்பி வாழும் கிழக்கு மக்களுக்கு சொந்தக் காலில் நிற்கும் வாய்ப்புக் கிடைக்குமென சிவநேசதுரை சந்திரகாந்தன் இங்கு தெரிவித்தார்.

இதன்போது உரையாற்றி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதுடன் இனப்பிரச்சினைக்கும் நிரந்தர தீர்வு வழங்கப்படும். அதற்காக அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என தெரிவித்ததுடன், எதிர்வரும் 05 வருடங்களில் கிழக்கு மாகாணத்தை விரிவான அபிவிருத்திக்குக் கொண்டு செல்லும் சவாலைத் தான் ஏற்றுக்கொள்வதாகவும் வலியுறுத்தினார்.

கோட்டாவின் ஜீப்பை பியூமி பெற்றது எப்படி?

குத்தகை வசதி பெற்று முதல் தவணை கட்டணத்தை செலுத்திய பியூமி, பின்னர் பலமுறை மீதியை செலுத்தியிருப்பது குற்றப் புலனாய்வுத் துறையினரின் விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து வேலியேபிள் ஃபைனான்ஸ் நிறுவனத்தின் விற்பனை அதிகாரியிடம் விசாரித்த குற்றப் புலனாய்வு அதிகாரிகள், ஸ்பீட் டிராப்டின் கீழ் 400 இலட்சம் ரூபாயை பியூமி ஹன்சமாலி பெற்றதாகவும், அந்தத் தொகையை நாளொன்றுக்கு ரூ.33,425 ஆகக் ஒரு வருட காலத்துக்குள் கொடுக்கப்பட்டதாகவும் தெரிவித்தனர்.

அவர் கிட்டத்தட்ட ஒரு மில்லியன் மாதத் தவணைகளைச் செலுத்தி, முழுத் தொகையையும் 2023 ஜூன் 30 அன்று செலுத்தி முடித்துள்ளார்.

பின்னர் 24.07.2023 அன்று, அதே வசதியின் கீழ் மேலும் ரூ. 450 இலட்சத்தைப் பெற்றதாகவும், அந்தத் தொகை 18.12.2023 அன்று செலுத்தப்பட்டதாகவும் வேலிபிள் ஃபைனான்ஸ் தெரிவித்தது.

19.12.2023 அன்று, இரண்டு கோப்புகளில் 450 இலட்சம் ரூபாவுக்கு பெறப்பட்டது, அதில் ஒரு நிதி வசதியின் கீழ் ஒரு நாளைக்கு 11,057 ரூபாய் வீதம் 12 மாதாந்திர தவணைகளில் செலுத்துவதற்கு 250 இலட்சம் ரூபாய் பெறப்பட்டது.

இதன்மூலம், பியூமியின் பெரிய கடன் தவணைகளை அழகு வணிகத்தின் மூலம் செலுத்த முடிந்தது என்பது தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மலையக சேவையை 9 மணிநேரம் தடுத்த மரம்

மலையகத்தில் பெய்த கடும் மழை மற்றும் பலத்த காற்றினால் பாரிய மர மரமொன்று முறிந்து வீழ்ந்ததன் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த மலையகத்துக்கான புகையிரத போக்குவரத்து ஞாயிற்றுக்கிழமை (23) மாலை 3 மணியுடன் வழமைக்குக் கொண்டுவரப்பட்டது என நாவலப்பிட்டி புகையிரத கட்டுப்பாட்டு அறை தெரிவித்துள்ளது.

இங்குருஓயா, கலபட ரயில் நிலையங்களுக்கு இடைப்பட்ட பென்ரோஸ் பகுதியில் புகையிரத தண்டவாளத்தை ஒட்டியுள்ள பாரிய மரமொன்று ஞாயிற்றுக்கிழமை (23) அதிகாலை 5-6 மணிக்கு இடையில், முறிந்து தண்டவாளத்தில் வீழ்ந்தது.

புகையிரத தண்டவாள தடை காரணமாக பதுளையில் இருந்து கொழும்பு நோக்கிச் செல்லும் அனைத்து பயணிகள் ரயில்களும் ஹட்டன் புகையிரத நிலையத்திலும், கொழும்பு கோட்டையில் இருந்து பதுளை நோக்கிச் செல்லும் பயணிகள் ரயில்கள் நாவலப்பிட்டி புகையிரத நிலையத்திலும் நிறுத்தப்பட்டன.

புகையிரத தண்டவாளத்தில் விழுந்த பாரிய மரத்தை நாவலப்பிட்டி, ஹட்டன் புகையிரத நிலையங்களின் புகையிரத பராமரிப்பு திணைக்கள ஊழியர்கள் வெட்டி அகற்றியுள்ளனர்.

மார மரம் விழுந்த அதே இடத்தில் பென்ரோஸ் தோட்டத்திற்குச் சொந்தமான மேலும் பல ஆபத்தான மரங்கள் புகையிரத தண்டவாளத்தில் விழும் அபாயம் இருப்பதாகவும், வெட்டி அகற்றுவதற்குத் தோட்ட அனுமதி வழங்கவில்லை எனவும் நாவலப்பிட்டி புகையிரத நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஜனாதிபதியின் கிழக்கு விஜயம்...

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, கிழக்கு மாகாணத்திற்கு சனி (22), ஞாயிறு (23) கிழமைகளில் விஜயமொன்றை மேற்கொண்டார்.

அங்கு தங்கியிருந்த காலத்தில், உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலுக்கு உள்ளான மட்டக்களப்பு சியோன் தேவாலயத்தின் புனரமைப்புப் பணிகளை பார்வையிட்டார்.

அத்துடன், மட்டக்களப்பு மாவட்டத்தில் 27,595 குடும்பங்களுக்கு காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு, திராய்மடு மாவட்ட செயலக வளாகத்தில் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றது.

அத்துடன், தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி உறுப்பினர்களுக்கு இடையிலான சந்திப்பொன்றும் மட்டக்களப்பு கட்சித் தலைமையகத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு 'கோல்டன் ரிவர்' ஹோட்டலில் நடைபெற்ற இளையோர் அணி சந்திப்பிலும் கலந்துக்கொண்ட ஜனாதிபதி , மட்டக்களப்பு-கரடியனாறு பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் நிலக்கடலை பதப்படுத்தும் நிலையத்தை ஞாயிற்றுக்கிழமை (23) காலை திறந்து வைத்தார்.

"100,000 தொழில் முயற்சியாளர்கள்"

பணிக்காக வெளிநாடுகளுக்குச் சென்று இலங்கை திரும்பிய தொழிலாளர்கள் மற்றும் வெளிநாடுகளில் தொழில்புரியும் தொழிலாளர்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களை இணைத்து 100,000 இலங்கை தொழில்முனைவோரை உருவாக்க நடவடிக்கை எடுக்கவுள்ளாகவும், அதனை ஜூலை 07ஆம் திகதி முதல் ஆரம்பிக்கவுள்ளதாக, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் இணைந்து இந்த நடவடிக்கையை ஆரம்பிக்கவுள்ளதாகவும், நாட்டில் தொழில் முயற்சியாளர்களை உருவாக்கி ஊக்குவிப்பதற்கான அவசியத்தை குறிப்பாக விளக்கி அதற்கான ஏற்பாடுகள் தயாராக இருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஜயகமு ஸ்ரீலங்கா அம்பாறை நிகழ்வினை சனிக்கிழமை (22) ஆரம்பித்து வைத்து உரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது, 100,000 தொழில் முயற்சியாளர்களுக்கு முதல் சுயதொழில் உதவியாக 50,000 ரூபாய் வழங்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளோம்.

டி.எஸ்.சேனநாயக்க 1949இல், சுதந்திர இலங்கையின் முதலாவது அபிவிருத்தித் திட்டமான கல் ஓயா வேலைத்திட்டம் இங்கு ஆரம்பிக்கப்பட்டது.

இங்கு மின்னேரியா குளத்தை

கட்டிய மஹாசேன் மன்னன் நீர்ப்பாசன கலாச்சாரத்திற்கு தனது பங்களிப்பால் கடவுளாக மாறினார். அதனால்தான் அம்பாறை மக்கள் டி.எஸ்.சேனநாயக்காவை கடவுளாகக் கருதியபோது, JVP தோழர்கள் அக் காலத்தில் எதிர்த்தார்கள்.

வரலாற்றின் ஆரம்பத்திலிருந்து இருந்து வேலை செய்யும் போது அபிவிருத்தி திட்டங்கள் எதிர்க்கப்பட்டன. இந்த நாடு முன்னேற முடியுமா? மலேசியா, சிங்கப்பூர், ஐக்கிய அரபு அமீரகம், துபாய், வியட்நாம், சீனா போன்ற நாடுகளில் பலகைப் போராட்டங்கள் நடக்கின்றனவே, போராட்டங்கள் நடந்தவுடன் அந்த நாடுகளில் அபிவிருத்தி திட்டங்கள் நிறுத்தப்பட்டதா? பலகை பிடித்தவர்களையும், தெருக்களில் கூச்சலிடுபவர்களையும் அவர்கள் விரும்பியவாறு நாடுகள் அபிவிருத்தி செய்யவில்லை. ஏனெனில் நாட்டு மக்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்பதில் துணிச்சலான முடிவுகளை ஜனாதிபதி ரணில் எடுத்தார் என தொரிவித்துள்ளார்.

உரிமைகளை வழங்க கோரி போராட்டம்

துவாரகஷான்

பெருந்தோட்ட மக்களுக்கு, அரசாங்கம் சகல உரிமைகளை வழங்குமாறு கோரி மாத்தளையில் சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில், அரசாங்கம், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் அரசியல்வாதிகளுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் கவனயீர்ப்பு போராட்டமொன்று சனிக்கிழமை (22) முன்னெ டுக்கப்பட்டுள்ளது.

இதில் கலந்துகொண்டவர்கள் கோஷங்கள் எழுப்பி, பதாதைகள் ஏந்தியவாறு தங்களின் உரிமைகளை அரசாங்கத்திற்கு வலியுறுத்தினர்.

ஆர்ப்பாட்டம் பிரதான நகரில் ஊர்வலமாக வருகை தந்து அதனைத் தொடர்ந்து அங்கு மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பொதுக்கூட்டமும் இடம்பெற்றுள்ளன.

ஆர்ப்பாட்டத்தில், காணி உரிமை, வீட்டு உரிமை ,தொழிலாளர்களுக்கான சம்பளம் அதிகரிப்பு, மொழி உரிமை, அரசியல் உரிமை, பெண்களுக்கான உரிமை உள்ளிட்ட கோரிக்கைகளை உள்ளடக்கிய பதாதைகள் காட்சி ப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நீங்கள் கண்டீர்களா?



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வெள்ளிக்கிழமை (21) நோயாளி ஒருவருடன் சகஜமாக பேசி, அவருடைய மோதிரம், பணம், கைப்பை போன்றவற்றை கொள்ளையடித்துச் சென்ற சந்தேகநபர் தொடர்பில் தகவல் கோரப்பட்டுள்ளது.

குறித்த நபர் சி.சி.ரி.வி. கெமராவின் மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளதாக வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்த சந்தேகநபர் தொடர்பாக விபரம் தெரிந்தால் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கோ வைத்தியசாலை நிர்வாகத்துக்கோ தெரிவிக்குமாறு பொதுமக்களுக்கு அவர் அறிவித்துள்ளார்.

இந்த நோயாளி கடந்த 19ஆம் திகதி சத்திர சிகிச்சை விடுதியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்படும் நோயாளிகள் தங்க ஆபரணங்களையோ பெறுமதியான பொருட்களையோ கொண்டு வரவேண்டாம் எனவும் தெரியாத நபர்களுடன் அவதானமாக இருக்கவேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

இரத்தினக்கல் அகழ்ந்த அறுவர் கைது

பொகவந்தலாவ-மஹாஎலிய வனப்பகுதியில் சுற்றுச்சூழலை அழித்தது அனுமதியின்றி, இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபட்ட ஆறு பேரை மஸ்கெலியா பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் ஞாயிற்றுக்கிழமை (23) கைது செய்துள்ளனர்.

காசலரி நீர்த்தேக்கத்தில் பிரதானமாக நீர்ப் பாயும் கெசல்கமுஓயா, மஹாஎலிய காப்புக்காட்டில் இருந்து ஆரம்பமாகி, காப்புக்காடு வழியாகப் பாயும் கால்வாய்களை ஒரு குழுவினர் அழித்து அனுமதியின்றி இரத்தினக்கல் அகழ்வதாகக் கிடைத்த தகவலின் பேரில், சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டு, ஆறு சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 30-45 வயதுக்கு இடைப்பட்டவர்கள் மற்றும் பொகவந்தலாவ-லோய்னோன் தோட்டத்தில் வசிப்பவர்கள் என்பதுடன், சந்தேகநபர்களுடன் மாணிக்கக்கல் அகழ்வதற்குப் பயன்படுத்தப்பட்ட பல உபகரணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களை சந்தேகநபர்களுடன் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாகன விபத்தில் ஒருவர் காயம்

யது பாஸ்கரன்

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கனகபுரம் பிரதான வீதியில் சனிக்கிழமை (22) இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் காயங்களுக்குள்ளாகிய நிலையில் உயிர்தப்பியுள்ளார் .

வேகமாகப் பயணித்த கெப்ரக வாகனத்தில் ஏற்பட்ட திடீர் பழுது காரணமாக சாரதியின் கட்டுப்பாட்டை மீறி வாகனம், வீதி அருகில் உள்ள தொலைத் தொடர்பு வலையமைப்புகளில் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் இரண்டு தொலைத்தொடர்பு தூண்கள் சேதமடைந்துள்ளதுடன், வலையமைப்பு வயர்களும் சேதமாகப்பட்டமையினால் குறித்த வீதியூடாக செல்கின்ற வலையமைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளது.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகிறார்கள்.

தியகல விபத்தில் ஒருவர் காயம்

தியகல பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (23) பேருந்தும் லொறியும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்து கினிகத்தேனை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஹட்டனிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ஹட்டன்-லங்காம டிப்போவிற்கு சொந்தமான பேருந்து கினிகத்தேன-தியகல பகுதியில் வைத்து லொறியும் மோதியே இவ் விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் லங்காம பேருந்தில் பயணித்த பயணி ஒருவர் காயமடைந்துள்ளதாகவும், காயமடைந்த நபர் சிகிச்சைக்காக கினிகத்தேனை பிரதேச வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கினிகத்தேனை பொலிஸார் ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் அதிகாரி கூறியுள்ளார்.

தகாத உறவால் ஒருவர் கொலை

ஹம்பாந்தோட்டை - கட்டுவான பிரதேசத்தில் தகாத உறவில் ஈடுபட்டு வந்தாக கூறப்படும் நபரொருவர் ஞாயிற்றுக்கிழமை (23) கத்தியால் குத்தி படுகொலை செய்யப்பட்டுள்ளதாகக் கட்டுவான பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

படுகொலை செய்யப்பட்டவர் அமுதமன பிரதேசத்தை சேர்ந்த 41 வயதுடையவர் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

படுகொலை செய்யப்பட்டவரின் மனைவியின் சகோதரரே இவரைக் கத்தியால் குத்தி கொலை செய்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கத்தியால் குத்தி கொலை செய்த நபர் விமானப்படையில் பணியாற்றி ஓய்வு பெற்றவர் எனவும் அவர் பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பெண்களுக்கான விழிப்புணர்வு

ஆ.ரமேஸ்

நுவரெலியா மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான விழிப்புணர்வு கொட்டக்கலையில் அமைந்துள்ள பிரிடோ நிறுவன காரியாலயத்தில் சனிக்கிழமை (22) இடம்பெற்றுள்ளது.

பிரிடோ நிறுவன நிகழ்ச்சி திட்ட முகாமையாளர் என்.கருணகரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், கிருஷ்ணவேணி மற்றும் திட்ட அதிகாரிகளுடன், நுவரெலியா மாவட்டத்தில் கிராம மற்றும் தோட்டப் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்களைச் சேர்ந்த 69 பெண்கள் கலந்து கொண்டுள்ளனர்.

இதன்போது பெண்களின் தலைமைத்துவத்தைக் கீழ் இயங்கும் குடும்பங்கள் தமது குடும்பம் மற்றும் அவர்களின் பிள்ளைகளின் கல்வியை மேம்படுத்துவதற்கும் மேலதிக குடும்ப வருமானத்தை பெற்றுக் கொள்வதற்கும் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அதேநேரத்தில், இப் பெண்களின் சுயதொழிலை ஊக்குவிப்பதற்காக அவர்கள் வாழக்கூடிய பிரதேசத்தில் இருக்கக்கூடிய வளங்களைப் பயன்படுத்தி காளான் பயிர்ச்செய்கை, நஞ்சற்ற பாரம்பரிய மரக்கறி வகைகளை உற்பத்தி செய்தல், வீட்டுத்தோட்ட பராமரிப்பு ஆகியவை தொடர்பில் விழிப்புணர்வு செய்யப்பட்டுள்ளது.

மேலும், கிராமிய உணவு பண்டங்களைச் சுகாதார ரீதியாகத் தயாரித்து அவற்றைப் பதப்படுத்தி பொதியிட்டு விற்பனை செய்தல் தொடர்பாகவும், சந்தை வியாபாரத்தை முன்னெடுப்பதற்கான வியாபார யுத்திகள் தொடர்பாகவும் இந்நிகழ்வில் கலந்து கொண்ட விரிவுரையாளர் எஸ்.ராஜ்குமார் இலகுவான வழிமுறையில் கருத்துரைத்து விழிப்புணர்வு ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தின் கள்ளக்குறிச்சியும் இலங்கையின் மலையகமும்

தமிழகத்தில் கள்ளக்குறிச்சியில் விஷ சாராயம் அருந்தியவர்களில் இதுவரையில் 57 பேர் மரணமடைந்துள்ளனர். மேலும் 20 பேர் கவலைக்கிடமாக உள்ளனர். பிரதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸ் நிலையம் அண்மையில் இருக்கும் நிலையிலேயே கள்ளக்குறிச்சியில் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

கள்ளக்குறிச்சி - கருணாபுரத்தில் செவ்வாய்க்கிழமை (18), விஷ சாராயத்தை அருந்திய பலருக்கு கண் எரிச்சல், வயிற்றுவலி போன்ற உபாதைகள் ஏற்பட்டு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அடுத்தடுத்து உயிரிழந்துள்ளனர்.

இதனால் பலி எண்ணிக்கை படிப்படியாக உயர்ந்துள்ளது. வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று சுகமடைந்து திரும்பியவர்களில் ஒருவர், வீட்டில் வைத்திருந்த விஷ சாராயத்தைக் அருந்தி உயிரிழந்துள்ளார். இந்நிலையில், விஷ சாராயத்தை அருந்தி மரணமடைந்த மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு அந்நாட்டு அரசாங்கத்தால் நட்டஈடு தொகை வழங்கப்படவுள்ளது.

இவ்வாறு தமிழகத்தில் பல இடங்களில் விஷ சாராயத்தைக் அருந்தியவர்கள் பலரும் உயிரிழந்துள்ளனர்.

அந்நாட்டு சட்டத்தின் பிரகாரம், குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து, எதிர்காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் சட்டம், ஒழுங்கை பேணவேண்டியதை அந்நாட்டிடமே விட்டு விடுகின்றோம்.

இந்நிலையில், நமது நாட்டிலும் கள்ளச்சாராய உற்பத்தி, விற்பனை அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. ஒவ்வொரு மாதமும் வரும் பௌர்ணமி தினத்தை அடிப்படையாகக் கொண்டு கள்ளச்சாராயத்தைக் காய்ச்சி விடுகின்றனர். இதற்காக, பல சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்படும். எனினும், அடுத்தடுத்த மாதங்களிலும் விற்பனைக்குக் குறைவிருக்காது.

அதில், மலையகத்தைப் பொறுத்தவரையில், கள்ளச்சாராய உற்பத்தியும் பாவனையும் அதிகரித்துள்ளது. கிராமங்களை அண்டிய பகுதிகளில் கசிப்பு உற்பத்தி அதிகம். தோட்டப் புறங்களை இலக்கு வைத்தே உற்பத்தி செய்யப்படுகின்றன. பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களால் பலவந்தமாக விற்பனைச் செய்யப்படுவது தெரிந்த விடயமாகும்.

இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களில் வாழும், பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பளத்தை கசிப்புக் கொடுத்து சுரண்டிக்கொள்ளும் கூட்டம் இருக்கத்தான் செய்கின்றது. அதனைத் தட்டிக்கேட்டதால் இனக் கலவரமும் வெடித்த சம்பவங்கள் ஏராளம். இறுதியில் கசிப்பு பக்கமே தலைவைத்துப் படுக்காதவர்களின் வீடுகளும் சூறையாடப்பட்டு, சொத்துக்களுக்கும் தீ வைக்கப்படும்.

சிறுபான்மை இனத்தவர்களால், குருவியைப் போல சிறுக, சிறுக சேமித்துவைக்கப்பட்ட சொத்துக்களே இவ்வாறு சூறையாடப்பட்டன. இல்லையேல் தீவைத்துக் கொளுத்தப்பட்டன. கிராமங்களை அண்டி இருக்கும் பெருந்தோட்டங்கள் பலவற்றில் அவ்வாறான நிலைமையே இன்னுமிருக்கிறது. சொப்பின் பேக்குகளில் பொதிச்செய்து விற்பனைச் செய்யப்படுகின்றன.

கள்ளச்சாராயம் மட்டுமன்றி, கசிப்பு உள்ளிட்ட உடலுக்குத் தீங்கிழைக்கும் சட்டவிரோதமான மது உற்பத்திகள் முற்றாக ஒழிக்கப்படவேண்டும்.

இல்லையேல் கள்ளக்குறிச்சியில் இடம்பெற்ற சம்பவத்தைப் போன்று, மலையகத்திலும் இடம்பெறுவது வெகு தொலைவில் இல்லை என்பதை முன்கூட்டியே ஞாபகப்படுத்துகின்றோம்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம்.
எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



திருமணத்துக்கு முன்னர், ஆண், பெண் இருசாராரும் தங்களது திருமண வாழ்வு, எப்படி இருக்க வேண்டும் என்று கற்பனை செய்வார்கள். அதன்படி வாழ்ந்தே தீரவேண்டும் என்று உறுதி பூணுவார்கள்.

ஆனால், எல்லோரது வாழ்க்கையும் நினைத்தபடி நடப்பதில்லை. திருமணத்தின் பின்னர் கூட, தங்களது இயல்புதான் சரியானது என, கங்கணம் கட்டியபடி, எவ்வித விட்டுக்கொடுப்பும் இன்றி, வாழ முயல்கின்றனர்.

இவர்களில் ஒருவர் கூட, விட்டுக்கொடுத்தால், எந்தவித பிரச்சினைகளும் எழாமல் அன்புடன் வாழமுடியும். ஆனால், ஒருசிலர் தங்கள் விடாப்பிடியான செய்கைகளால், அவரோ அவரது மனைவியோ விட்டுக்கொடுப்பதை கௌரவக் குறைச்சல் என எண்ணி, 'நான் ஏன் விட்டுக்கொடுக்க வேண்டும்' என்ற தன்முனைப்புடன் இருந்தால், குடும்பம் களேபரமாகி விடும்.

திருமணப் பந்தம் பல்லாயிரம் ஆண்டுகள் நீடித்திருக்கும் பரம்பரையை உருவாக்கும் திவ்விய இணைப்பு. இதைச் சாதாரணமானதாக எண்ணிப் பிரிந்து போனால் நிம்மதியை இழப்பது மட்டுமல்ல, தவறு செய்பவர் எவரோ அவர், சமூகத்தில் நம்பிக்கையற்றவர் ஆகின்றார்.

திருமணம் நடைபெற முன்னர், ஆழ்ந்து யோசனை செய்ய வேண்டும். அன்பு மேலோங்கினால், பிரிவு இல்லை.

– பருத்தியூர் பாலு. வயிரவநாதன்

கடிதங்கள்

யானை வேலி அமையுங்கள்

திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் உள்ள ஈச்ச நகரில் காட்டு யானைகள் பயிர்களை அழித்து வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

வாழை, தென்னை, மரவள்ளி உள்ளிட்ட பயிர்களை யானைகள் அழித்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கின்றனர். இக் காட்டு யானை தொடர்ந்தும் தங்களது ஊருக்குள் இரவு வேலைகளில் வருவதனால் நிம்மதியாக உறங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தங்களது வீடுகளுக்கும் சேதம் விளைவித்துச் சென்றுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் பாதுகாப்பான யானை வேலி இன்மையால் இச் சம்பவங்கள் இடம் பெறுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். எனவே, உரிய அதிகாரிகள் தங்களையும் தங்கள் உடைமைகளையும் இக் காட்டு யானையிலிருந்து பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு உரிய அதிகாரிகளிடத்தில் கோரிக்கை விடுக்கின்றனர்.

– ஏ.எச்.ஹஸ்பர்

தமிழ் மக்களின் கைகளுக்கு வந்துள்ள அரசியல் தீர்மானம்

– லக்ஸ்மன்

ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றால் போட்டியிடவுள்ள எந்தவொரு வேட்பாளருக்கும் பெரும்பான்மை வாக்குகள் கிடைக்கப்போவதில்லை என்பது உறுதியாகிவிட்டது. அப்படியானால் அவர்கள் இரண்டாம், மூன்றாம் விருப்பு வாக்குகளையே இலக்கு வைக்கவேண்டும்.

இதற்கிடையில்தான் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பான உரையாடல்கள் சற்றுத் தீவிரமடைந்திருக்கின்றன. தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பில் இறுதித் தீர்மானங்கள் எட்டப்படா விட்டாலும்கூட, அவ்விடயம் தமிழ் மக்கள் மத்தியிலும் முழு இலங்கையிலும் சர்வதேசம் வரையிலும் அதிக கவனத்தைப் பெற்றிருக்கின்றது. அதனை எதிர்ப்பவர்களும் ஆதரவு கொடுக்காவிட்டாலும், எதிர்ப்பையேனும் கைவிடும் நிலை ஏற்படலாம் என்றும் எதிர்வு கூறப்படுகிறது. அத்துடன், அதனை எதிர்ப்பவர்கள் மத்தியிலும் பதற்றம் ஒன்றும் ஏற்பட்டுவிட்டது.

தமிழ்ப் பொது வேட்பாளர் விடயம் அரும்பு விடும் வேளையில், அது ஒரு பேசுபொருளாகும் என்ற எண்ணம் எதிர்ப்பவர்களிடம் இருக்கவில்லை. ராஜபக்ஷக்களை உயிர் பெறச் செய்யவே இந்தக் கோசம் ஆரம்பிப்பதாகத் தமிழரசுக் கட்சியின் சிலர் கருத்து வெளியிட்டிருந்தனர். அது பின்னர் வளர்ந்து தமிழரசுக் கட்சியினால் தமிழ்ப் பொது வேட்பாளர் தேவையில்லை என்கிற நிலைப்பாடாக மாறியது.

ஆனாலும், அக்கட்சியின் ஏனைய தரப்பினரிடையே இந்த எதிர்ப்பு நிலைப்பாட்டுக்கு எதிர் நிலைப்பாடும் இருக்கத்தான் செய்கிறது. இந்த நிலையில், வேறுவேறு கதைகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன.

ஜனாதிபதி தேர்தல்களில் சிங்களக் கட்சியைச் சேர்ந்த வேட்பாளர்களுக்கு வாக்களித்து எந்தப் பலனும் இல்லை. அல்லது பயனற்றே போகும் என்பது தெரிந்திருந்தும் வாக்களிப்பதை விடவும் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்துவது சிறப்பு என்பதே நிலைப்பாடு.

விடுதலைப் புலிகளது காலத்தில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவைத் தோற்கடிப்பதற்கான நிலைப்பாட்டினை எடுத்து மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியானார். அதன் பின்னரான காலங்களில் விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டனர்.

யுத்தம் மௌனித்த பின்னர், நடைபெற்ற தேர்தலில் அதே எதிர்ப்பு மனோநிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யுத்தத்தை வழி நடத்தியவரான பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவுக்கு வாக்களிக்குமாறு தமிழ் மக்களுக்கு அறிவித்தது. பின்னர் நல்லாட்சி அரசொன்றை உருவாக்குவதற்காக ரணில் விக்ரமசிங்க தரப்புக்கு ஆதரவளித்து மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியானார்.

அடுத்ததாக நடைபெற்ற தேர்தலில் தமிழ் மக்கள் புலிகளின் தற்கொலைத் தாக்குதலில் பலியான முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் மகனான சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு வழங்கினர். அத் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ பெரும்பான்மைச் சிங்கள மக்களின் ஆதரவுடன் ஜனாதிபதியாகத் தெரிவானார்.

அப்பிப்பிராயங்கள் பல இருந்தாலும், தம்முடைய எதிர்ப்புகளையே வாக்குகளாகக் கடந்த காலங்களில் பெரும்பான்மைக் கட்சிகளின் ஜனாதிபதி வேட்பாளர்களுக்குத் தமிழர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

ஆனாலும், சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்குப் பின்னர், தமிழ் மக்களின் பெரும் ஆதரவு பெற்ற யாரும் ஜனாதிபதியாகத் தெரிவாகவில்லை என்றே கூறலாம். இருந்தாலும், மைத்திரிபால சிறிசேன கணிசமான தமிழ் மக்களின் ஆதரவுடனேயே ஜனாதிபதியானார். ஆனாலும், ரணில் விக்ரமசிங்க தலைமையில் ஏற்படுத்தப்பட்ட நல்லாட்சி காலத்தில் அவர்கள் நினைத்தவை நடைபெறாமலேயே வீணடிக்கப்பட்டதற்கு மைத்திரிபால சிறிசேன காரணமாகும். அவ்வாறு பார்க்கையில் கடந்த பல தேர்தல்களிலும் தமிழ் மக்கள் போதிய பாடங்களைப் படித்துவிட்டனர் என்று கூறலாம். மறுபுறத்தில் தமிழ் மக்கள் பெரும்பான்மைக்கு வேட்பாளர் ஒருவரை ஆதரிப்பதனால் தமிழ் மக்களுக்கு எந்தப்பயனும் கிடைக்கப் போவதில்லை.

தற்போது தமிழ்ப் பொது வேட்பாளரை எதிர்க்கும் அல்லது எதிர்க்க முற்படுபவர்கள் இது ஒரு சிறிய குழுவினரின் கருத்தே, மக்களுடன் கலந்துரையாடி முடிவுகளை எடுக்கப்படவில்லை. அரசியல் தீர்மானங்களில் மக்களுடன் கலந்துரையாடுதல் கட்டாயம் என்ற தோரணையில் கருத்துக்களை வெளியிடுகின்றனர். இருந்தாலும், யுத்தத்துக்கு முன்னரும் சரி, யுத்தத்துக்குப் பின்னரும் சரி எடுக்கப்பட்ட தீர்மானங்கள் இலட்சக்கணக்கான மக்களுடன் கலந்துரையாடி எடுக்கப்படவில்லை. எழுந்த மானமாக எடுக்கப்பட்டவையே என்கிற விதமாகவும் கருத்துக்கள் வெளிவருகின்றன.

ஆனால், மக்கள் சார்பில் தீர்மானங்கள் எடுக்கப்படும்போது மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள், பொது நிலைப்பாட்டை ஆதரிக்கும் புத்திஜீவிகள், கல்விமான்கள், மதத் தலைவர்கள் தீர்மானங்களை எடுப்பதுண்டு. அவ்வாறு எடுக்கப்பட்ட தீர்மானங்கள் மக்களால் ஆதரிக்கப்படும்போது, அதற்காக மக்கள் ஆணை பெறப்படுவதே வழமையாக இருந்துவருகின்றது. இந்த நிலையில்தான், கடந்த பதினைந்து வருடங்களில் இவ்வாறான அணுகுமுறையில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டனவா என்றால் அதற்கு யார் பதில் சொல்வார்கள் என்று தெரியவில்லை.

இந்த இடத்தில்தான் விடுதலைப் புலிகளுக்குப் பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் முடிவுகளாக, அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.சம்பந்தன் உள்ளிட்டோர் எடுத்த முடிவுகளே தமிழ் மக்களின் முடிவுகளாக, தீர்மானங்களாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அவ்வேளைகளில், எவருமே இது மக்களின் முடிவு அல்ல என்று கூற முற்படவில்லை. தனிநபர்களின் முடிவுகளை நியாயப்படுத்துபவர்களாகவே இருந்து வந்துள்ளனர். யுத்தம் மௌனிக்கப்பட்டு 15 வருடங்கள் கடந்த பின்னரும் தம்மைத் தமிழ் மக்களின் ஏக அரசியல் கட்சியாகத் தாமாகவே வரித்துக் கொண்ட கட்சியினால் எதனையும் சாதித்துவிட முடியவில்லை. இந்த நிலையில்தான் வெளியிலுள்ள தரப்பினர் தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலத்துக்காக தம்பங்கையாற்றுவதற்கு முனைந்து வருகின்றனர்.இவ்வாறிருக்கையில் தற்போது அரசியல் கட்சிகள், புத்திஜீவிகள், கல்விமான்கள், சிவில் பிரதிநிதிகள், மதத் தலைவர்கள் இணைந்து ஒரு முடிவினை நோக்கி நகர்கையில் ஏன் மறுப்பும் எதிர்ப்பும் வருகிறது என்பதுதான் கேள்வி. அதே நேரத்தில், தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது எனும் தீர்மானம் பெரும்பாலான தரப்புகளால் உடன்பாட்டுடன், கொள்கை ரீதியான இணக்கப்பாட்டுக்கு வந்து மக்களால் அது ஆதரிக்கப்பட்டால் முடிவு எவ்வாறிருக்கும் என்பதே அடுத்த கேள்வி.

இந்த இடத்தில் தான் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க ஆகியோரின் வடக்கு விஜயங்களை நாம் நோக்க வேண்டும்.

அண்மைக்காலமாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வடக்கை இலக்கு வைத்து தனது நகர்வுகளை மேற்கொண்டிருந்தார். அதனையடுத்தே இவர்கள் தங்களுடைய விஜயங்களை மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன், தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தையும் 13ஆவது திருத்தம் தொடர்பிலும் இவர்கள் தங்கள் நிலைப்பாடுகளை வெளிப்படுத்தியுமிருக்கின்றனர்.

இந்தக் கருத்துக்கள் தமிழ் மக்கள் மத்தியில் மகிழ்ச்சியைத் தருகின்றவைகளாக இருந்தாலும், தெற்கிலுள்ள சிங்களப் பெரும்பான்மை மக்களிடம் ஒரு கிலியை ஏற்படுத்தியிருக்கிறது. இந்தக் கிலி சிங்கள மக்களின் வாக்குகளைக் குறைத்துவிடும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

அதே நேரத்தில், கொரோனா காலத்தில் மரணமான முஸ்லிம் மக்களது சடலங்களை எரித்தமை தொடர்பில் கடந்த வாரத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் உரையாற்றியிருக்கிறார். இந்த உரையாடல் வெளிப்படையாகவே சிறுபான்மையினரை இலக்கு வைக்கும் அரசியலாகும். அத்துடன், தமிழ் மக்களுடைய பிரச்சினைக்கு 13 பிளஸ் தொடர்பில் கருத்து வெளியிட்டமைக்கு சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே ரணசிங்க பிரேமதாச விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் வழங்கியதைவிடவும் மோசமானது என விமர்சித்திருக்கிறார். இது அவருடைய தனிப்பட்ட கருத்தாக இருந்தாலும் அவர் ஒரு மக்கள் பிரதிநிதி என்ற வகையில், பெரும்பான்மை சிங்கள மக்களுடைய சிந்தனையாகவே கொள்ளவேண்டும்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஒரு பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்ற முடிவு குறித்த அறிவிப்புகள் வந்த வண்ணமிருக்கையில், பெரும்பான்மைக் கட்சிகள் சிறுபான்மை மக்களை இலக்கு வைப்பது ஒன்றும் நடைபெறக்கூடாத விடயமல்ல. இது நடைபெறுவதும் அரசியல் ரீதியான வேறு ஒரு வகையான முயற்சியே.

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் பெரும்பான்மை வாக்குகளை எந்த ஒரு வேட்பாளரும் பெற்றுக்கொள்ளமாட்டார் என்பது உறுதியாகிவிட்ட நிலையில் இரண்டாம், மூன்றாம் விருப்பு வாக்குகளே தீர்மானம் மிக்கவையாக இருக்கப்போகின்றன. அந்தவகையில் அவர்களது முயற்சி பயனைத் தரலாம். அதற்குத் தமிழ் மக்களை ஒத்திசைய வைப்பதற்கான முயற்சிகளே நடைபெற்றிருக்கின்றன என்று கொள்ளலாம். இதனை நாம் வேண்டாமென்றும் ஒதுக்கிவிட முடியாது. வாய்ப்பைப் பயன்படுத்துவதும் அரசியல்தானே. இந்த அரசியலையும் தமிழ் மக்கள் செய்து தானாகவேண்டும்.

இந்த இடத்தில்தான், கடந்த காலங்கள் போல் தமிழ்மக்கள் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தந்திரோபாயமாக வாக்களித்தால் அவர்களது வாக்குகள் பெரும்பாலும் வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கும் என்ற எதிர்வு கூறல்களையும் நாம் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும்.

2024/25 காலப்பகுதிக்கான தொலைபேசி கோவையில்

கொலோனியல் எண்ஜினியரிங்

உள்நாட்டில் ஸ்டீல் மற்றும் ஹார்ட்வெயார் தொழிற்துறையில் ஈடுபட்டுள்ள கொலோனியல் எண்ஜினியரிங் (பிரைவட்) லிமிடெட், SLT-MOBITEL குழுமத்தினால் வெளியிடப்படவுள்ள 2024/25 தேசிய வியாபார தொலைபேசிக் கோவையான ரேன்போ பேஜஸ் இல் பிரதான விளம்பரதாரராக இணைந்துள்ளது. தேசிய வியாபார தொலைபேசிக் கோவையின் முதல் 20 சிறந்த வாடிக்கையாளர்களில் ஒன்றாகத் திகழும் கொலோனியல் எண்ஜினியரிங், இந்த பரிபூரண சந்தைப்படுத்தல் கட்டமைப்பில் காணப்படும் பெறுமதியை நன்கு உணர்ந்துள்ளது.

இந்த வருடத்தின் பிற்பகுதியில் வெளியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள தேசிய வியாபார தொலைபேசிக் கோவை 2024/25 இல், இலங்கையின் முன்னணி வியாபார தொழிற்துறைகளின் தகவல்கள் உள்ளடக்கப்பட்டு, பிந்திய தரவுகளைக் கொண்ட கோவையாக அமைந்திருக்கும். ஒப்பந்தத்தின் பிரகாரம், 2005ஆம் ஆண்டு நிறுவப்பட்ட கொலோனியல் எண்ஜினியரிங், குழாய்கள், ஸ்டீல், பொறியியல், நிர்மாணம் மற்றும் நீர் குழாய் பொருத்துகைகள் பொருட்கள் போன்றவற்றை இறக்குமதி, விநியோகம், விற்பனை மற்றும் மொத்த விற்பனையில் ஈடுபடுவதுடன், தமது தேவைகளுக்கு பொருத்தமான வகையில் ஒன்லைன் மற்றும் ஒஃவ்லைன் விளம்பரப்படுத்தல் தெரிவுகளை பெற்றுக் கொள்ளும். அவற்றில் டிஜிட்டல் சந்தைப்படுத்தல் மூலோபாயங்கள், இணையத் தீர்வுகள், e-வணிகம், சொப்பிங் கார்ட் மற்றும் பொருளடக்க தயாரிப்பு சேவைகள் போன்றன அடங்கியிருக்கும்.

SLT-MOBITEL குழுமத்தின் துணை நிறுவனமாக திகழும் Sri Lanka Telecom (Services) Limited (SLT-SERVICES) இனால் நிர்வகிக்கப்படும் தேசிய வியாபார தொலைபேசி கோவையான ரேன்போ பேஜஸ், பல்வேறு தெரிவுகளில் விளம்பரப்படுத்தலுக்கான வாய்ப்பை வழங்குகின்றது. இதில் ஒன்லைன், eBook, அழைப்பு நிலையம் மற்றும் அச்சிடப்பட்ட புத்தகம் ஆகியன அடங்கியுள்ளன. அதன் பரிபூரண தெரிவுக்காக இந்தக் கோவை புகழ்பெற்றுள்ளதுடன், 10,000க்கும் அதிகமான தினசரி ஒன்லைன் தேடல்கள் மற்றும் 6,000 க்கும் அதிகமான வியாபார பதிவிடல்கள் ஆகியவற்றை பல்வேறு துறைகளில் கொண்டுள்ளது. இதில் அரச நிறுவனங்கள் மற்றும் சமய வழிபாட்டுத் தலங்கள் போன்றனவும் அடங்கியுள்ளன.

பாவனையாளர்களுக்கு உள்நாட்டு தேடல் அனுபவத்தை மேம்படுத்தும் வகையில், உறுதி செய்யப்பட்ட தொடர்பாடல் தகவல்களை கொண்டுள்ளமை ரேன்போ பேஜஸ் கோவையின் முக்கியமான உள்ளம்சங்களில் ஒன்றாக அமைந்துள்ளது.

மேலும், search engine optimization (SEO) ஊடாக பதிவு செய்யப்பட்ட வியாபாரங்களுக்கு அனுகூலம் கிடைப்பதுடன், தமது ஒன்லைன் பிரசன்னம் மற்றும் சென்றடைவை மேம்படுத்திக் கொள்ளவும் முடியும். மேலும், அரசாங்க விலைமனுக்கோரல்களுக்கான தகைமையை வழங்குவதுடன், வளர்ச்சி மற்றும் விருத்திக்கான புதிய வாய்ப்புகளையும் வழங்குகின்றது. டிஜிட்டல் சந்தைப்படுத்தல் மற்றும் இணைய வடிவமைப்பு தீர்வுகள் போன்றவற்றில் SLT-SERVICES கவனம் செலுத்துவதுடன், வாடிக்கையாளர்களுக்கு சிறந்த பெறுமதிகளை பெற்றுக் கொடுப்பதிலும் கவனம் செலுத்துகின்றது.

டிஜிட்டல் வங்கியியலை ஊக்குவிப்பு

மேம்படுத்துகிறது கொமர்ஷல் வங்கி,

இலங்கையில் அதிகம் பயன்படுத்தப்படும் டிஜிட்டல் தளமான கொமர்ஷல் வங்கியின் 'ComBank Digital' பயன்பாட்டை மேம்படுத்துவதற்காக கொமர்ஷல் வங்கி ஆரம்பித்த அற்புதமான புதிய பிரசாரத்தின் கீழ், 300 வாடிக்கையாளர்களின் மின்சாரக் கட்டணங்கள் வங்கியினால் மீள வழங்கப்படுவதுடன், மூன்று வாடிக்கையாளர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்கள் ஒவ்வொருவரும் இரண்டு சிங்கப்பூர் பயணப் பொதியை வெல்லவுள்ளனர்.

இந்த பெறுமதி மிக்க பரிசில்கள் இரண்டு ஊக்குவிப்பு திட்டங்களின் கீழ் வழங்கப்படும் என்று வங்கி அறிவித்துள்ளது. இதற்கிணங்க 'கொடுப்பனவை செலுத்தி வெல்லுங்கள்' (Pay and Win) மற்றும் 'பரிவர்த்தனை செய்து வெல்லுங்கள்' (Transact and Win) ஆகிய இரு ஊக்குவிப்பு திட்டங்களும் ஆகஸ்ட் 2024 இறுதி வரை நடைமுறையில் உள்ளதுடன், இவை தற்போதுள்ள ComBank Digital இனை பயன்படுத்தும் அனைத்து பயனர்களுக்கும் தகுதி பெற்ற புதிய பதிவுதாரர்களுக்கும் திறந்திருக்கும்.

'கொடுப்பனவை செலுத்தி வெல்லுங்கள்' (Pay and Win) ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் ஜூன், ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் ComBank Digital மூலம் மின்கட்டணத்தைச் செலுத்தும் 300 வாடிக்கையாளர்களுக்கு 10,000 ரூபாய் வரை பணம் மீள வழங்கப்படும்.

ஒரே நேரத்தில் இயங்கும், 'பரிவர்த்தனை செய்து வெல்லுங்கள்' (Transact and Win) ஊக்குவிப்பு திட்டமானது, ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட பரிவர்த்தனைகளைச் செய்யும் வாடிக்கையாளர்களுக்கானதாகும். இது தொடர்ச்சியாக மூன்று

மாதங்களுக்கு மாதத்திற்கு மூன்று பயன்பாட்டு கட்டணங்களை செலுத்துதலை உள்ளடக்குகிறது. இவர்கள் சீட்டிழுப்புக்கு உள்ளாக்கப்பட்டு அதில் மூன்று அதிர்ஷ்டசாலி வெற்றியாளர்கள், 6 சிங்கப்பூர் சுற்றுப் பயணங்களுக்கு தெரிவு செய்யப்படுவர்.

'ComBank Digital' ஆனது ஏற்கெனவே ஒவ்வொரு மாதமும் சராசரியாக 4 மில்லியனுக்கும் அதிகமான பரிவர்த்தனைகளை செயல்படுத்துகிறது, இந்நிலையில், இந்த எண்ணிக்கையை ஊக்குவிப்பதுடன், மேலும் அதிகரிப்பதே எங்கள் நோக்கம்' என்று கொமர்ஷல் வங்கியின் டிஜிட்டல் வங்கியியல் உதவி பொது முகாமையாளர் பிரதீப் பந்துவன்ச தெரிவித்தார். 'இந்தப் பிரசாரம் ComBank Digital இன் பரந்த பயன்பாட்டைத் தூண்டுவதுடன், மேலும் அதிகமான மக்கள் உற்சாகமான பரிசில்கள் மற்றும் பணம் மீளப்பெறலை (கேஷ்பேக்குகளை) வெல்வதற்கான அதிக நன்மைகளுடன் அதன் செயல்பாடு மற்றும் வசதியை அனுபவிக்க உதவுகிறது.

புதிய வாடிக்கையாளர்கள் ComBank Digital இல் முதல் வருட வருடாந்தக் கட்டணம் மற்றும் இணைவதற்கான கட்டணம் இல்லாமல் பதிவு செய்து அதன் சௌகரியம், புதிய அம்சங்கள், இயங்குதளத்தின் பயனர்களுக்கு எதிர்காலத்தில் திட்டமிடப்பட்டுள்ள நன்மைகள் மற்றும் சலுகைகளை அனுபவிக்கலாம் என வங்கி தெரிவித்துள்ளது.

தனியாள் வளர்ச்சியில்

சம வயது குழுக்களின் பங்களிப்பு

முருகேசு கிரிஜா,
4ஆம் வருடம் சிறப்பு கற்கை மாணவி, கல்வி, பிள்ளை நலத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்.

இந்த உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதப் பிறவியும் தமக்கே உரித்தான தனித்துவமான உடல், உள, மனப்பாங்குகளைக் கொண்டிருக்கின்றனர். இருப்பினும், மனிதன் ஒரு சமூகப் பிராணி என்று அழைக்கப்படுகின்றான்.

அதனால் அவனால் தனித்து வாழ முடியாது. ஒருவன் தான் தனியாகவே வாழ வேண்டும் என்று முடிவெடுத்துச் செயற்பட்டாலும் கூட வாழ்க்கை என்னும் சக்கரத்தில் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் அல்லது பல சந்தர்ப்பங்களில் பிற நபர்களுடன் அவன் ஒன்றிணையவே நேரிடுகின்றது.

ஒவ்வொரு தனிமனிதனது வளர்ச்சிப் பாதையிலும் செல்வாக்கு செலுத்தும் மிக முக்கிய அம்சங்களில் குடும்பத்திற்கு அடுத்தபடியாக சம வயது குழுக்களின் செல்வாக்கு அதிகரித்துக் காணப்படுகின்றது. ஒரே வயதினையுடைய அல்லது ஒரே வயது வரம்புக்குள் உள்ளடக்குகின்ற ஒரே செயற்பாடுகளைச் செய்யக்கூடிய நபர்களின் குழுவே சம வயது குழு எனப்படுகின்றது.

ஒப்பீட்டளவில் இவர்கள் தமது வயது நியமத்தின் படி ஒரே மாதிரியான அனுபவங்கள், சிந்தனைகள், எண்ணங்கள், உணர்வுகள், தேவைகள் போன்றவற்றினை கொண்ட குழுவாகக் காணப்படுவார்கள். சூழல் மற்றும் சூழ்நிலைகளைப் பொறுத்து சம வயதுக் குழுக்களின் தன்மைகள் வேறுபடுகின்றன.

குழந்தைகளுக்கு தங்களது வீட்டுச் சூழலுக்கு அண்மையில் அமையும் சம வயதுக் குழுவினரை விட பாடசாலைக்குச் செல்ல ஆரம்பித்த பின்னர் அவர்களுக்குக் கிடைக்கும் சம வயதுக் குழுவினரின் எண்ணிக்கை அதிகமாகும். இத்தகைய சம வயதுக் குழுவினரின் செல்வாக்கானது குறித்த பிள்ளையின் தனியாள் வளர்ச்சியில் பல்வேறு விதமான தாக்கங்களை ஏற்படுத்துகின்றது.

ஒரு பிள்ளை தனது ஆரம்பப் பள்ளிப் பருவத்தினை விட முன் கட்டிளமைப் பருவத்தின் தொடக்கமான ஒன்பது வயதிலிருந்தே சம வயது குழுவினருக்கு அதிக முக்கியத்துவம் வழங்கத் தொடங்குகின்றது.

தினமும் 6 மணித்தியாலங்களுக்கும் அதிகமான நேரத்தைப் பாடசாலையில் செலவிடும் பிள்ளைகள் பாடசாலையில் இருக்கின்ற காலப்பகுதியில் தம்முடன் கல்வி பயிலுகின்ற பிற பிள்ளைகளோடு பல்வேறு சந்தர்ப்பங்களில் தொடர்புகளைப் பேணுகின்றனர். இத்தகைய தொடர்பு அவர்கள் பிற்கால சமூகங்களில் பல குழுக்களுடன் ஒன்றிணைவதற்கான அடித்தளத்தினை அமைத்துக் கொடுக்கின்றது.

அந்த வகையில் பாடசாலையில் சம வயது குழுக்களில் அங்கம் வகிக்கின்ற பிள்ளைகள் எதிர்காலத்தில் சமய நிறுவனங்கள் மற்றும் சிறுவர் குழுக்கள், இளைஞர் அணிகள், சமூக சேவைக் குழுக்கள், பணியிடம் சார் குழுக்கள், அரசியல் நடவடிக்கை சார் குழுக்கள், விளையாட்டுக் குழுக்கள் உள்ளிட்ட பல்வேறு சம வயது குழுக்களை அமைத்துக் கொள்கின்றனர் அல்லது அதில் அங்கத்துவம் வகிக்கின்றனர்.

ஒரு தனியாள் சமூகத்தில் எவ்வாறு வெளிப்படுகின்றான் என்பது அவனுடைய தனிப்பட்ட உடல், உள, மனப்பாங்கு நிலைமைகளின் பிரதிபலிப்புக்களாக மட்டும் அமைவதில்லை. ஒரு தனியாளின் வெளிப்பாடானது அவனைச் சூழ்ந்திருக்கின்ற சம வயதுக் குழுக்களின் செயல்பாடுகளிலும் தங்கி இருக்கின்றது. அந்த வகையில் சம வயதுக் குழுக்கள் ஒரு தனியாளின் சிந்தனை மற்றும் செயல் ஆகிய இரு பகுதிகளிலும் முக்கிய செல்வாக்கு செலுத்துகின்றன.

இத்தகைய செல்வாக்கானது ஒரு தனிமனிதனை சமூகத்தில் ஒரு நல்ல பிரஜையாக அடையாளப்படுத்துவதிலும் அவனை சமூகத்துக்கு ஒவ்வாத ஒரு தீயவனாக அடையாளப்படுத்துவதிலும் செல்வாக்கு செலுத்துகின்றது.

ஒரு காலகட்டத்தில் ஒரு பிள்ளைக்குத் தனது பெற்றோர் மற்றும் சகோதர சகோதரிகளை விட நமது நட்பு வட்டாரத்தின் கதைகளும், செயல்பாடுகளுமே வேதவாக்காக மாறிவிடுகின்றன. இத்தகைய சந்தர்ப்பங்களில் தனது குழுவினர் செய்வதே தமக்குச் சரியாகத் தோன்றக்கூடிய மனநிலையில் அவர்கள் காணப்படுவர்.

எனவே, பிள்ளைகளின் நட்பு வட்டாரம் தொடர்பாகப் பெற்றோரும், பாதுகாவலர்களும், சகோதர சகோதரிகளும், ஆசிரியர்களும் கவனத்துடன் செயல்பட வேண்டியது அவசியமாகும். சம வயதுக் குழுக்களானது ஒரு தனியாளின் வளர்ச்சியிலும், வீழ்ச்சியிலும் செல்வாக்கு செலுத்துகின்ற மிக முக்கியமான ஒரு அம்சமாகக் காணப்படுகின்றது.

இந்த உலகில் காணப்படுகின்ற ஒவ்வொரு சிறு சிறு விடயங்களிலும் சாதகங்களும் பாதகங்களும் இருக்கவே செய்கின்றன. அதேபோல் தான் இந்த சம வயது குழுக்களினாலும் பல்வேறு விதமான சாதகங்களும் பாதகங்களும் பிறப்பிக்கப்படுகின்றன.

சம வயது குழுக்களினால் ஏற்படுகின்ற சாதகமான விளைவுகள் ஏராளமாகக் காணப்படுகின்றன அத்தகைய சாதகமான விளைவுகளை கீழ் வருமாறு பார்க்கலாம். ஒரு தனியார் சம வயது குழுக்களிடமிருந்து ஒற்றுமை, மகிழ்ச்சி, விட்டுக் கொடுப்பு, சகிப்புத்தன்மை, புரிந்துணர்வு, புதிய அறிவு பரிமாற்றம், பொறுப்புணர்வு, தைரியம், தன்னம்பிக்கை, மரியாதை, நன்றியுணர்வு, படைப்பாக்கம், சுய ஒழுக்கம், மன உறுதி, வெளியுலக அறிவு, சமூக அமைப்புக்கள் பற்றிய அறிவு, வேறுபட்ட வாழ்க்கை கோலங்கள் பற்றிய புரிதல், சுதந்திரம், சமத்துவம், ஒத்துழைப்பு உள்ளிட்ட பலதரப்பட்ட விடயங்களை கற்றுக் கொள்கின்றான்.

இவற்றின் விளைவாக ஒரு தனியாளினால் தம் வாழ்வில் எதிர்பார்த்த வெற்றிகளை அடைந்து கொள்ள முடிகின்றது.

குறித்த ஒரு சம வயது குழுவில் ஓரிருவர் தைரியம் குறைந்தவர்களாகவோ அல்லது தாழ்வு மனப்பான்மை கொண்டவர்களாகவோ காணப்படுகின்ற பொழுது அந்த குழுவில் உள்ள ஏனையோர் அவர்களை ஊக்கப்படுத்தி அவர்களிடம் காணப்படுகின்ற திறமைகளை வெளிக்காட்டச் செய்வதற்கு முயற்சிக்கும் போது ஒரு புதிய ஆளுமை அவர்களிடம் வளர்த்தெடுக்கப்படுகின்றது. இதன் விளைவாகச் சிறந்த கல்விப் பெறுபேறுகளையோ, விளையாட்டுத் துறை சார்ந்த வெற்றிகளையோ, புதிய கண்டுபிடிப்புக்களையோ அவர்களால் சாத்தியப்படுத்த முடிகின்றது.

இதன் மூலமாக எதிர்காலத்தில் தமது குடும்பத்தினருக்கும், தான் சார்ந்த சமூகத்தினருக்கும் மகிழ்ச்சியான வாழ்வினை ஒரு தனியாளினால் அமைத்துக் கொடுக்க முடிகின்றது. இவ்வாறு சமூகத்துக்கு முன்னுதாரணமான ஒரு பிரஜையை உருவாக்கிக் கொடுப்பதில் சம வயது குழுக்கள் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன. இவ்வாறு சம வயது குழுக்களினால் ஊக்கப்படுத்தப்படுகின்றவர்கள் தம்மை தமது குழுவினர் ஊக்கப்படுத்தியது போலத் தாமும் பிறரை ஊக்கப்படுத்த வேண்டும் என்ற மனப்பாங்குடன் சமூகத்தில் பலரை ஊக்கப்படுத்துகின்ற நபர்களாகத் திகழ்வதற்கான சந்தர்ப்பங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. அதேபோல சம வயதுக் குழுவினர் தமது குழுவில் உள்ள நபர்களுக்கு யாதேனும் பிரச்சினை ஏற்பட்டாலோ அல்லது தேவைகள் ஏற்பட்டாலோ முன் நின்று அவர்களுக்குரிய தேவைகளைச் செயல்படுத்திக் கொடுப்பதில் முக்கியத்துவம் பெறுகின்றனர்.

உதாரணமாக தமது குழுவில் உள்ள விசேட தேவையுடையவர்களுக்கான உதவிகளை வழங்குதல், தமது குழுவினரின் இல்லங்களில் இடம்பெறுகின்ற விழாக்கள் மற்றும் மரண வீடுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களிலும் சம வயது குழுவினரின் செயற்பாடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. சம வயது குழுவினரின் இத்தகைய செயல்பாடுகளின் காரணமாக அக்குழுவில் அங்கம் வகிக்கின்ற ஒவ்வொரு தனி ஆளும் தமக்கு ஆதரவு வழங்குவதற்குப் பிறர் இருக்கின்றார்கள் என்ற மன தைரியத்துடன் செயல்படக்கூடிய வாய்ப்பினை பெறுகின்றனர்.

இந்த தைரியமானது அவர்கள் பல முன்னேற்றகரமான செயல்திட்டங்களை முன்னெடுப்பதற்கும் துணை புரிகின்றது. சம வயதுக் குழுக்களின் செல்வாக்கின் காரணமாக வாழ்க்கையில் வெற்றி கண்ட பலர் வாழுகின்ற இந்த உலகில், சம வயது குழுக்களின் செல்வாக்கின் காரணமாக தமது வாழ்க்கை பயணத்திலிருந்து திசை மாறி, தமது கனவுகளைத் தொலைத்து, தற்கொலை செய்து கொண்டவர்களும், தமது வாழ்க்கையைத் தொலைத்து நடைப்பிணமாக அலைபவர்களும் இருக்கவேச் செய்கின்றனர். எனவே அடுத்ததாகச் சம வயது குழுக்களினால் ஏற்படக்கூடிய பாதகமான தாக்கங்களைப் பார்க்கலாம்.

"அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு" என்ற ஒற்றுமையை உணர்த்தக் கூடிய பழமொழியை நாம் நம் வாழ்வில் அடிக்கடி கேட்டிருப்போம். அது போல தான் சம வயதுக் குழுவினர் ஒன்று சேர்வதன் மூலமாகக் கிடைக்கக்கூடிய ஏராளமான நன்மைகள் காணப்படுகின்றன. இருந்த போதிலும் சம வயது குழுக்களின் சில தவறான செயற்பாடுகள் அல்லது நடத்தைகளின் காரணமாக அதில் அங்கம் வகிக்கின்ற ஒவ்வொரு தனியாளினதும் வாழ்க்கை பயணத்தில் பலவிதமான சிக்கல்களையும், பிரச்சினைகளையும் தோல்விகளையும் சந்திக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது.

சம வயதுக் குழுவினர் ஒன்றிணைந்து சாதிக்கக்கூடிய விடயங்கள் ஏராளம் இருக்கையில் சில குழுவினரினுடைய தவறான புரிதல்கள் அல்லது தவறான நடத்தைகளின் காரணமாக ஏற்படக்கூடிய பல்வேறு பாதகமான தாக்கங்களும் இருக்கவே செய்கின்றன.

ஒரு பிள்ளை தனது சம வயதுக் குழுவினரிடமிருந்து பொய் பேசுதல், திருடுதல், பிறர் மீது பழி சுமத்துதல், பிறரை இகழ்தல், சக நண்பர்களே ஒதுக்கி வைத்தல், பிற உயிர்களைக் கொடுமைப்படுத்துதல், பிறரின் உபகரணங்களை அபகரித்தல் உள்ளிட்ட தீமையான விடயங்களை தமது சிறுபராயத்தில் பெற்றுக் கொள்கின்றது.

இவ்வாறு பிள்ளை தனது சம வயது குழுவினரிடம் இருந்து கற்றுக் கொள்கின்ற தீமையான நடத்தைகள் சரியாக இனங்காணப்பட்டுச் சீர்திருத்தப்படாத பட்சத்தில் எதிர்கால வாழ்வில் களவு, கொலை, கொள்ளை, கடத்தல், மிரட்டல் விடுத்தல், பாலியல் துஷ்பிரயோகம், மது பாவனை மற்றும் போதைப்பொருள் கடத்தல், கேலி செய்தல், பெரியோரை இகழ்தல், சட்ட திட்டங்களை மதிக்காமை, இலஞ்சமும் ஊழலும், வன்முறையில் ஈடுபடல், சட்டவிரோத வணிகம், கள்ளக் காதலுக்கு உடந்தையாகச் செயற்படல் உள்ளிட்ட பலதரப்பட்ட பாதகமான விடயங்களை கற்றுக் கொள்கின்றது.

இத்தகைய பாதகமான விடயங்களை ஒரு தனியாள் கற்றுக் கொள்வதிலும் சம வயதுக் குழுக்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

சில சம வயது குழுக்களின் செயல்பாடுகள் காரணமாகக் குறித்த இனங்களின் பாரம்பரியம் மற்றும் பண்பாடு போன்றவை அழிவுக்குள்ளாகியும் வருகின்றன. கிளப் பார்ட்டிகள், களியாட்டங்கள், குழுவாகப் போதைப்பொருள் பாவித்தல். குழுவாக இணைந்து பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபடல், பகிடிவதைகளில் ஈடுபடல், அவசியமற்ற போராட்டங்களில் ஈடுபடல், சமூகத்தின் அமைதியை சீர்குலைத்தல், கடமைகளை அலட்சியம் செய்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் அதில் உள்ளடங்குகின்றன.

அன்றாட உலகளாவிய நடப்புக்களை ஆராய்கின்றபோது இடம்பெறுகின்ற அதிகளவிலான விபத்துக்கள் சம வயதுக் குழுவினரின் கவனயீனத்தால் நிகழ்கின்றவையாகவேக் காணப்படுகின்றன. கடலில் குளிக்கச் சென்ற நண்பர்கள் கடலுக்குள் மூழ்குதல், உயரத்திலிருந்து புகைப்படம் எடுக்கச் சென்று கீழே விழுதல், வேகமாக வாகனங்களை ஓட்டிச் செல்லுதல், தவறான தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளுதல் போன்ற விடயங்களில் சம வயதுக் குழுவினரின் தீமையான செல்வாக்கினை அவதானிக்கலாம்.

இன்றைய காலகட்டங்களை பொறுத்தவரையில் நேரடியாக மாத்திரமின்றி, சமூக வலைத்தளங்களின் ஊடாகவும் சம வயது குழுவினர் ஒன்றாக இணைவதற்கான சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. இவ்வாறு ஒன்றிணைகின்ற குழுக்கள் சமூக வலைத்தளங்களில் பல மணி நேரங்களை வீணாகச் செலவிடுகின்றனர். பொருத்தமற்ற உரையாடல்களை மேற்கொள்கின்றனர்.

இவற்றின் காரணமாக பல்வேறு உளவியல் ரீதியான பிரச்சினைகளுக்கும் ஆளாகின்றனர். அது மாத்திரமின்றி, சமூக ஊடகங்களின் மூலமாக ஏற்பாடு செய்யப்படுகின்ற களியாட்ட நிகழ்வுகளிலும் போதைப் பொருள் பாவனைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. இதன் காரணமாக வாழ்க்கையில் உயர்வடைய வேண்டிய பலர் தங்களது வாழ்க்கையைப் புரட்டிப் போடுகின்ற சில சந்தர்ப்பங்களை எதிர்கொள்ள நேரிடுகின்றது. இதன் காரணமாகச் சம வயது குழுவினரால் தனியாள் வளர்ச்சியானது பாதிப்படைகின்றது.

ஒரு காலத்தில் ஒன்றாக ஓடியாடி விளையாடுவதற்காக சமவயதினருடன் ஒன்றிணைந்த பிள்ளைகள் தற்காலங்களில் வீடியோ கேம் விளையாடுவதில் சம வயது குழுக்களுடன் இணைந்து செயலாற்ற விரும்புகின்றனர். உதாரணமாக பப்ஜி எனப்படுகின்ற விளையாட்டைக் குழுவாக இணைந்து விளையாடுவதன் பொருட்டு சம வயது குழுக்களுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ள பிள்ளைகளும் இந்த காலத்தில் இருக்கவே செய்கின்றனர்.

எனவே இத்தகைய சம வயது குழுக்களின் மூலமாக அக்குழுவில் அங்கம் வகிக்கின்ற ஒவ்வொரு தனி நபர்களது வளர்ச்சியும் பாதிப்படையவே செய்கின்றது.

ஒரு சில சம வயது குழுக்களில் புதிதாக ஒருவர் இணைந்து கொள்ள விரும்பினால் அந்தக் குழுவுக்கு என்று தனித்துவமாகக் காணப்படும் சில செயற்பாடுகளை அவரும் செய்பவராக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

உதாரணமாகப் புகைத்தல், மது அருந்துதல், பிறரைக் கேலி செய்தல் உள்ளிட்ட சில தீய செயல்களை அவர்கள் குறித்த நபருக்குப் பரிந்துரைக்கின்றனர். இத்தகைய செயல்பாடுகளினால் ஒரு தனி நபருடைய வளர்ச்சியானது தடைப்படுகின்றது.

இவ்வாறு பல்வேறு நன்மைத் தீமைகள் காணப்படுகின்ற போதிலும், இன்றைய வேகமான உலகில் கூட்டுக் குடும்பங்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. குடும்பத்துக்குள் பகிர்ந்து கொள்ள முடியாத பல விஷயங்களை, நண்பர்களுக்குள் பகிர்ந்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தமும் காணப்படுகின்றது. எனவே, ஒவ்வொரு தனிமனிதனும் சம வயதுக் குழுக்களை விரும்புகின்றனர். ஆகவே, மேலே கூறப்பட்ட விடயங்களைத் தொகுத்து நோக்கும் போது, சம வயது குழுக்கள் ஒரு மனிதனின் வளர்ச்சியிலும் மிகச் செயலும் தாக்கம் செலுத்துகின்ற பிரதான காரணிகளாகத் திகழுகின்றன என்பதை அறிய முடிகின்றது.

சம வயதுக் குழுக்களினால் பிள்ளையினுடைய வாழ்க்கையில் ஏற்படுகின்ற தாக்கங்கள் தொடர்பில் பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் போன்றோர் ஆரம்பக் கட்டங்களில் கவனத்துடன் செயல்படுதல் வேண்டும்.

அது மாத்திரமின்றி, முன் கட்டிளமைப் பருவத்தில் பெற்றோர்கள், சகோதரர்கள் போன்றோர் அவர்களது நண்பர்களுடன் ஒளிவு மறைவின்றி கண்ணியமாகப் பழகும் விதத்தினை பிள்ளைகளுக்கு அடையாளம் காட்டுதல் வேண்டும்.

மேலும் பிள்ளைகள் தங்களிடம் கூற வருகின்ற கருத்துக்களைச் செவிமடுத்தல் மற்றும் அவர்களது கருத்துக்களுக்கு மதிப்பளித்தல் தேவையான ஆலோசனைகளை வழங்குதல் போன்ற விடயங்களில் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் ஈடுபடுதல் வேண்டும்.

ஆரம்பக் கட்டங்களில் பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் மற்றும் பாதுகாவலர்களால் முன்னெடுக்கப்படுகின்ற இதுபோன்ற செயல்பாடுகளின் காரணமாக அவர்கள் தங்களது எதிர்கால வாழ்வில் சந்திக்கின்ற சம வயதுக் குழுக்களுடன் பொருத்தமான வகையில் தொடர்புகளைப் பேணுவதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுத்திக் கொடுக்க முடியும்.

"நிறைநீர நீரவர் கேண்மை
பிறைமதிப் பின்னீர பேதையர் நட்பு"

கல்லூரிகளில் பட்டம் பெறும் வெளிநாட்டவர்களுக்கு

Green cards

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த டொனால்ட் டிரம்ப் குடியுரிமை விவகாரத்தில் மிகவும் கண்டிப்பானவர். வெளிநாட்டவர்களுக்கு விசா வழங்கும் விடயத்தில் மற்ற தலைவர்களை எதிர்த்தார்.

புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் தங்கள் நாட்டிற்கு திரும்பிச் செல்லக்கூடிய சூழ்நிலையை அவர் எதிர்கொண்டார். அமெரிக்கா, அமெரிக்கர்களுக்கானது என்ற கொள்கை கொண்டவர்.

தற்போது மீண்டும் குடியரசு கட்சி சார்பில் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடுகிறார்.

ஜனாதிபதித் தேர்தல் நவம்பர் மாதம் நடைபெறவுள்ளது. இந்த நிலையில், குடியுரிமை குறித்த தனது முந்தைய உரையில் இருந்து அவர் பின்வாங்கியுள்ளார்.

போட்காஸ்ட் ஒன்றில் பேசிய டொனால்ட் டிரம்ப், இங்குள்ள கல்லூரிகளில் பட்டம் பெறும் வெளிநாட்டவர்களுக்கு கிரீன் கார்டு வழங்கலாம் என்று கூறினார். "நீங்கள் கல்லூரியில் பட்டம் பெற்றால், உங்கள் படிப்பின் ஒரு பகுதியாக தானாகவே கிரீன் கார்டு கிடைக்கும் என்று நான் நினைக்கிறேன்.

இந்த நாட்டில் தங்குவதற்கு கிரீன் கார்டு அவசியம். இதில் ஜூனியர் கல்லூரிகளும் அடங்கும்," என்று அவர் கூறினார். மேலும், "முன்னணி கல்லூரிகள் அல்லது பல்கலைக் கழகங்களில் பட்டம் பெற்றவர்கள் இங்கேயே தங்கி நிறுவனம் தொடங்க திட்டமிடுவார்கள்.

இந்தத் திட்டத்தை செயல்படுத்த முடியாவிட்டால் அமெரிக்காவில் படித்துவிட்டு இந்தியா திரும்புவார்கள். சீனாவுக்குத் திரும்புவார்கள். அவர்களுக்குப் பதிலாக இதே போன்ற நிறுவனங்களைத் தொடங்குவார்கள். அவர்கள் கோடீஸ்வரர்களாக மாறி ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலை கொடுக்கிறார்கள். அதை இங்கே செய்யலாம்" என்றார்.

தஜிகிஸ்தான்

ஹிஜாப்புக்கு தடை: மீறினால் அபராதம்

96 சதவீதம் இஸ்லாமியர்கள் வசிக்கும் மத்திய ஆசிய நாடான தஜிகிஸ்தான் நாட்டில் பெண்கள் ஹிஜாப் அணிய தடை விதிக்கப்பட்டுள்ளதோடு, முக்கிய பண்டிகைகள் கொண்டாட தடை உள்ளிட்ட பல்வேறு மசோதாக்களுக்கு அந்நாட்டு அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளமை பெரும் சர்ச்சைக்குள்ளாகியுள்ளது.

இவ்வாறு தடையை மீறி பெண்கள் ஹிஜாப் அணிந்தால் அபராதம் விதிக்கப்படும் என்பதோடு, அரசு அதிகாரிகளுக்கும் மத தலைவர்களுக்கும் கூட அபராதம் விதிக்கப்படும் எனவும் அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

தஜிகிஸ்தான் அரசாங்கம் 2007ஆம் ஆண்டில் கல்வி அமைச்சகம் இஸ்லாமிய உடை மற்றும் மேற்கத்திய பாணி மினி ஸ்கர்ட் இரண்டையும் மாணவர்களுக்கு தடை செய்த நிலையில், தற்போது ஹிஜாப் மீது நடவடிக்கை எடுக்கத் தொடங்கியுள்ளது.

மேலும், கொசோவோ, அஜர்பைஜான், கஜகஸ்தான் மற்றும் கிர்கிஸ்தான் உட்பட பல முஸ்லிம் பெரும்பான்மை நாடுகள், பள்ளிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள், அரசாங்க அதிகாரிகளுக்கு புர்கா மற்றும் ஹிஜாபை தடை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

புதுடெல்லி

ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டை தவிர்க்கும் பிரதமர் மோடி

கஜகிஸ்தானில் நடக்கும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு மாநாட்டில் பிரதமர் மோடி பங்கேற்க மாட்டார் என்பதோடு, அவருக்கு பதில் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் கலந்து கொள்ளவுள்ளதாகத் தெரிவந்துள்ளது.

கஜகிஸ்தானின் அஸ்தானா நகரில் ஜூலை 3 மற்றும் 4 திகதிகளில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு மாநாடு நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில், சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங், ரஷ்ய ஜனாதிபதி புடின், பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

கடந்த சில ஆண்டுகளாக இந்த கூட்டத்தில் பிரதமர் மோடி நேரில் சென்று பங்கேற்று வருகிறார். அதனால், இந்த ஆண்டும் அவர் பங்கேற்பார் என தகவல்கள் வெளியானது.

ஆனால், லோக்சபா தேர்தலுக்கு பிறகு முதன்முறையாக பாராளுமன்ற கூட்டம் நடைபெற உள்ளதால், இந்த கூட்டத்தில் பிரதமர் பங்கேற்க மாட்டார் எனவும் அவருக்கு பதில் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் கலந்து கொள்ள உள்ளார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

ரொக்கெட்டின் பாகம் விழுந்ததால்

சிதறி ஓடிய மக்கள்

பீஜிங்

சீனா ஏவிய ரொக்கெட்டின் ஒரு பகுதி மக்கள் குடியிருப்பு பகுதிக்குள் விழுந்து வெடித்துள்ளது. இதனை பார்த்த மக்கள் அலறியடித்து ஓடியுள்ளது.

கடந்த 22ஆம் திகதி சீனாவும், பிரான்சும் இணைந்து லாங் மார்ச் 2சி என்ற ரொக்கெட்டை விண்ணில் செலுத்தியது. இந்த ரொக்கெட் ஆனது நைட்ரஜன் டெரோக்சைட் மற்றும் அன்சிமெட்ரிகல் டைமெத்திலிஹைட்ரஜின் கலவையை எரிபொருளாக பயன்படுத்துகிறது. இது மனிதர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும்.

இந்நிலையில், ரொக்கெட் ஏவப்பட்ட சிறிது நேரத்தில் ரொக்கெட்டில் கோளாறு ஏற்பட, அதில் இருந்த பூஸ்டர் எனப்படும் கருவி பூமியை நோக்கி வந்தது.

அது, மனிதர்கள் குடியிருப்பு பகுதிக்குள் விழுந்த நிலையில், வெடித்து சிதறியுள்ளது.

இந்த கருவி பூமியை நோக்கி வருவதை பார்த்த மக்கள் அலறியடித்து ஓடியுள்ளனர். அதிர்ஷ்டவசமாக இதனால் யாருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை.

மேலும், ரொக்கெட் பாகம் பூமியில் விழுந்த காணொளி சமூக வலைத்தளங்களில் பரவி வருகின்ற அதேசமயம், இந்த ரொக்கெட் திட்டம் வெற்றி அடைந்ததாக சீனா அறிவித்து உள்ளமை குறிப்பிடத்தக்கது.

புதுடெல்லி

குடும்பத்துடன் சேர்ந்து

இரட்டை குழந்தைகளை கொலை செய்த தந்தை

புதுடெல்லியில் இரட்டையர்களான பெண் குழந்தைகளை குடும்ப உறுப்பினர்களே கொலை செய்து புதைத்துள்ள சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது

ஹரியானா மாநிலம் ரோஹ்தக்கை சேர்ந்த பெண் ஒருவர், கடந்த 2022இல் புதுடெல்லி பகுதியைச் சேர்ந்த ஒருவரை திருமணம் செய்துள்ளார்.

திருமணம் செய்த சில நாட்களிலேயே அப்பெண்ணின் கணவரின் குடும்பம் வரதட்சணை கேட்டு, இவரை தொடர்ந்து துன்புறுத்தியுள்ளனர். மேலும் ஒரு ஆண் குழந்தையை பெற்றெடுக்க வேண்டும் என்றும் வற்புறுத்தியுள்ளனர்.

சிறிது காலத்திற்கு பிறகு இப்பெண் கருவுறவே, அவரின் வயிற்றில் இருக்கும் குழந்தையின் பாலினம் என்னவென்று அறிய பாலின பரிசோதனை செய்யுமாறு குடும்பத்தார் இவரை கேட்டுக்கொண்டுள்ளனர்.

ஆனால், பின்விளைவுகளை எண்ணி இவர், அதை செய்து கொள்ள மறுத்துள்ளார்.

இந்நிலையில், பிரசவமடைந்த இப்பெண்ணுக்கு இரட்டை பெண் குழந்தைகள் பிறந்துள்ளன. இதனை அறிந்த அப்பெண்ணின் கணவரும், அவரது வீட்டாரும் குழந்தைகளுக்கு நல்ல சிகிச்சை அளிப்பதாகக் கூறி, பெண்ணிடமிருந்து குழந்தைகளை வாங்கி சென்றுள்ளனர்.

இதன் பிறகு, குழந்தைகள் எங்கே என்று அப்பெண் கேட்கவே, உடல்நலம் சரியில்லாமல் இருவரும் இறந்து விட்டதாகப் பெண்ணின் கணவர் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, சந்தேகமடைந்த அத்தாய், தன் குடும்பத்தினர் உதவியோடு பொலிஸாரை அணுகி நடந்ததைக் கூறியுள்ளார்.

இதனை அடுத்து தொடர் விசாரணை நடத்திய பொலிஸார், சப்டிவிஷனல் மாஜிஸ்திரேட்டை அணுகிப் புதைக்கப்பட்ட குழந்தைகளின் உடலை மீண்டும் தோண்டி எடுக்கும் உத்தரவைப் பெற்றுள்ளனர்.

பிறகு பெண் சிசுக்களின் உடல்களைப் பிரேதப் பரிசோதனை செய்ததில், இரட்டை பெண் குழந்தைகளை குடும்ப உறுப்பினர்களே கொலை செய்து புதைத்தமை தெரியவந்துள்ளது.

இந்த பெண் சிசுக்கொலை விவகாரம், நாடு முழுவதும் கடும் அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.



இருபதுக்கு-20 உலகக் கிண்ணம்:

பங்களாதேஷை வீழ்த்திய இந்தியா

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடரில், அன்டிகுவாவில் சனிக்கிழமை (22) நடைபெற்ற பங்களாதேஷ் உடனான குழு ஒன்று சுப்பர்-8 சுற்றுப் போட்டியில் இந்தியா வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷின் அணித்தலைவர் நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ, தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடுமென அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, அணித்தலைவர் றோஹித் ஷர்மாவின் 23 (11), விராட் கோலியின் 37 (28), றிஷப் பண்டின் 36 (24), ஷிவம் டுபேயின் 34 (24), ஹர்திக் பாண்டியாவின் ஆட்டமிழக்காத 50 (27) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 196 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில், தன்ஸின் ஹஸன் சகிப் 4-0-32-2, மகமதுல்லா 2-0-8-0, மஹெடி ஹஸன் 4-0-28-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 197 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ், பாண்டியா (2),குல்தீப் யாதவ் (3), ஜஸ்பிரிட் பும்ரா (2), அர்ஷ்டீப் சிங்கிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 146 ஓட்டங்களையே பெற்று 50 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில் ஷன்டோ 40 (32), தன்ஸிட் ஹஸன் 29 (31), ரிஷாட் ஹொஸைன் 24 (10) ஓட்டங்களைப் பெற்றனர்.

இப்போட்டியின் நாயகனாக பாண்டியா தெரிவானார்.

இருபதுக்கு-20 உலகக் கிண்ணம்:

ஆப்கானிஸ்தானிடம் தோற்ற அவுஸ்திரேலியா

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடரில், சென். வின்சென்டில் ஞாயிற்றுக்கிழமை (23) நடைபெற்ற ஆப்கானிஸ்தானுடனான குழு ஒன்று சுப்பர்-8 சுற்றுப் போட்டியில் நடப்புச் சம்பியன்களான அவுஸ்திரேலியா தோற்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: அவுஸ்திரேலியா

ஆப்கானிஸ்தான்: 148/6 (20 ஓவ.)

(துடுப்பாட்டம்: ரஹ்மனுல்லாஹ் குர்பாஸ் 60 (49), இப்ராஹிம் ஸட்ரான் 51 (48), கரிம் ஜனட் 13 (09), மொஹமட் நபி ஆ.இ 10 (04) ஓட்டங்கள். பந்துவீச்சு: பற் கமின்ஸ் 3/28 [4], அடம்ஸாம்பா 2/28 [4], அஸ்தன் அகர் 0/17 [4], கிளென் மக்ஸெவ்ல் 0/12 [2])

அவுஸ்திரேலியா: 127/10 (19.2 ஓவ.)

(துடுப்பாட்டம்: கிளென் மக்ஸ்வெல் 59 (41) ஓட்டங்கள். பந்துவீச்சு: குல்படின் நைப் 4/20 [4], நவீன்-உல்-ஹக் 3/20 [4], மொஹமட் நபி 1/1 [1], ரஷீட் கான் 1/23 [4], அஸ்மதுல்லாஹ் ஓமர்ஸாய் 1/10 [1.2], பஸல்ஹக் பரூக்கி 0/21 [3])

போட்டியின் நாயகன்: குல்படின் நைப்

இப்போட்டியின் ஆப்கானிஸ்தானின் இனிங்ஸின் 18ஆவது ஓவரின் இறுதிப் பந்தில் அணித்தலைவர் ரஷீட் கானின் விக்கெட்டைக் கைப்பற்றிய அவுஸ்திரேலியாவின் பற் கமின்ஸ், 20ஆவது ஓவரின் முதலாம், இரண்டாம் பந்துகளில் கரிம் ஜனட், குல்படின் நைப்பின் விக்கெட்டுகளைக் கைப்பற்றி அடுத்தடுத்த போட்டிகளில் இரண்டாவது ஹட்-ட்ரிக் சாதனையைப் படைத்தார்.

இந்நிலையில் சென். லூசியாவில் இன்றிரவு 8 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் இந்தியா அவுஸ்திரேலியா எதிர்கொள்ளவுள்ளதுடன், சென். வின்சென்டில் செவ்வாய்க்கிழமை (25) காலை 6 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் பங்களாதேஷை ஆப்கானிஸ்தான் எதிர்கொள்ளவுள்ளது.

கலாநிதி யூ.கே.நாபீர் வெற்றிக் கிண்ணத் தொடர்:

சம்பியனானது பிளாஸ்டர்

எஸ்.அஷ்ரப்கான்

கலாநிதி யூ.கே. நாபீர் வெற்றிக் கிண்ண இருபதுக்கு-10 கடினபந்து கிரிக்கெட் தொடரில் சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக்கழகம் சம்பியனானது.

அம்பாறை மாவட்ட 32 முன்னணி விளையாட்டுக் கழகங்கள் மோதிய கடந்த இரண்டு மாதங்களாக நடைபெற்று வந்த இத்தொடரின் இறுதிப் போட்டியானது, சாய்ந்தமருது தலைவர் அஸ்ரப் ஐக்கிய விளையாட்டு மைதானத்தில் வியாழக்கிழமை(20) நடைபெற்றபோது, கல்முனை ஜூனியஸ் விளையாட்டுக் கழகத்தை வென்றே பிளாஸ்டர் சம்பியனானது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஜூனியஸ் விளையாட்டுக் கழகம் 10 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 72 ஓட்டங்களை பெற்றது. பதிலுக்கு 73 ஓட்டங்களென்ற வெற்றியிலைக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய பிளாஸ்டர் 8.5 ஓவர்களில் 4 விக்கெட்டுகளையே இழந்து வெற்றியிலக்கையடைந்தது.

யூரோ: இறுதி 16 அணிகள் சுற்றில் போர்த்துக்கல்

ஜேர்மனியில் நடைபெற்று வரும் ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் யூரோ கிண்ணத் தொடரின் இறுதி 16 அணிகளுக்கான சுற்றுக்கு போர்த்துக்கல் தகுதி பெற்றது.

சனிக்கிழமை (22) நடைபெற்ற துருக்கியுடனான குழு எஃப் போட்டியில் 3-0 என்ற கோல் கணக்கில் வென்ற போர்த்துக்கல் இறுதி 16 அணிகளுக்கான சுற்றுக்குத் தகுதி பெற்றது.

போர்த்துக்கல் சார்பாக பெர்ணார்டோ சில்வா, புரூனோ ஹெர்ணாண்டஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, மற்றைய கோல் ஓவ்ண் கோல் முறையில் பெறப்பட்டிருந்தது.

பெர்ணாண்டஸ் பெற்ற கோலுக்கு போர்த்துக்கல்லின் அணித்தலைவர் கிறிஸ்டியானோ ரொனால்டோ உதவியிருந்த நிலையில் யூரோ கிண்ணத் தொடர்களில் கோல்களைப் பெறுவதற்கு அதிக தடவைகள் உதவிய செக் குடியரசின் கரெல் பொபொர்ஸ்கியின் சாதனையை முன்களவீரரான ரொனால்டோ சமப்படுத்தியிருந்தார்.

இதேவேளை இப்போட்டியின்போது 39 வயதான ரொனால்டோவுடன் செல்பிகளை எடுப்பதற்காக ஆதரவாளர்கள் மைதானத்துக்குள் சென்றமையடுத்து நான்கு தடவைகள் போட்டி இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன், போட்டி முடிவடைந்த பின்னரும் இவ்வாறான இரண்டு சம்பவங்கள் இடம்பெற்றிருந்தன.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 24, ஜூன் 2024, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.